க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2017

மதிப்பீட்டு அறிக்கை

32 - வணிகக் கல்வி

Curriculum
Assessment
&
Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

முழுப் பதிப்புரிமையுடையது.

க.பொ.த (உ.தர)ப் பரீட்சை- 2017

மதிப்பீட்டு அறிக்கை

32 - வணிகக் கல்வி

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையானது இலங்கையின் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியின் இறுதிச் சான்றிதழ் பரீட்சையாகும். சிரேஷ்ட இடை நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்களின் அடைவு மட்டத்தைச் சான்றுப்படுத்தல் இப்பரீட்சையின் முக்கிய நோக்காக இருந்த போதும் தேசிய பல்கலைக்கழகங்கள், ஏனைய உயர் கல்வி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவு செய்தலும் கூட இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறுவதால் அடைவுப் பரீட்சையாகவும் தேர்வுப் பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம் நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையைச் சான்றுப்படுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டில் இப்பரீட்சைக்காக 206630 வரையிலான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 46700 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும்கூட பெரிதும் முயற்சி செய்கின்றனர். அவர்களின் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டே இந்த மதிப்பீட்டு அறிக்கையை இலங்கை பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள், பரீட்சையை எதிர்பார்த்திருப்போர், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர், கல்வி ஆய்வாளர்கள் ஆகிய அனைவருக்கும் பயன்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. எனவே இவ்வறிக்கையைக் கூடுதலான பிரிவினர்களின் ஆய்விற்குற்படுத்துவது மிகப் பொருத்தமானதாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) வணிகக் கல்வி பாடத்தின் பாட நோக்கம் பாட அடைவு பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி I இல் அடங்கியுள்ளன. இதனடிப்படையில் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்ற விதம், மாவட்ட மட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ள விதம், வகுப்பாயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாட அடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் வணிகக்கல்விப் பாடத்தின் வினாத்தாள் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் ஒவ்வொரு பகுதிகளுக்கும் புள்ளிகள் பெறப்பட்ட விதம் என்பன பற்றி விரிவாகக் குறிப்பிடும் பாட அடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2017 க.பொ.த (உ.தர)ப் பரீட்சையில் வணிகக்கல்விப் பாடத்தின் வினாத்தாள் I, II என்பவற்றுக்கான வினாக்கள் அவ்வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி II இல் அடங்கியுள்ளன. இதன் அடிப்படையில் வினாத்தாள் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புக்களும் முடிபுகள், மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபுரீதியான சோதனைக் கோட்பாடு மற்றும் Classical testing theory, உருப்படித் துலங்கள் கோட்பாடு (Item response theory) என்பவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்களும் இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாக்களுக்கு விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் கற்றல் - கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையில் பகுதி III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள், அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன பற்றி அறிந்துகொள்வதற்கு இந்த அறிக்கையானது பெரிதும் துணைபுரியும் என நான் நம்புகின்றேன்.

எதிர்காலத்தில் தொகுக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக்கூடிய பயன்தரும் கருத்துகள், ஆலோசனைகள் என்பவற்றை எமக்குக் கிடைக்கச்செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள், ஊக்கத்துடன் பங்களிப்பு வழங்கிய குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கை பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பணிக்குழுவினர் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பீ. சனத் பூஜித

பரீட்சை ஆணையாளர் நாயகம்

2020.05.14

ஆய்வு அபிவிருத்திக் கிளை

இலங்கை பரீட்சைத் திணைக்களம்

பெலவத்தை,

பத்தரமுல்ல.

ஆலோசனை	:	பீ. சனத் பூஜித பரீட்சை ஆணையாளர் நாயகம்
ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும்	:	கயாத்திரி அபேகுணசேகர பரீட்சை ஆணையாளர் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி)
இணைப்பாக்கம்	:	எஸ். பிரணவதாசன் பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஆய்வு அபிவிருத்திக் கிளை)
பாட இணைப்பாக்கம்	:	பீ. ஏ. வெனுர சந்திக (உதவிப் பரீட்சை ஆணையாளர்)
தொகுப்பு	:	பேராசிரியர் காமினி த அல்விஸ் சிரேஷ்ட விரிவுரையாளர் கொழும்புப் பல்கலைக்கழகம் கலாநிதி எம்.டீ. புஸ்பகுமாரி சிரேஷ்ட விரிவுரையாளர் வணிக நிர்வாக விஞ்ஞானக் கல்வித் துறை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
ஆக்கக் குழு	:	டபிள்யு.எம். சுதுபண்டா வணிகக் கல்வி - ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்விப் பணிமனை பஸ்ஸரை டபிள்யு.டீ. ரஞ்சித் ஜயநாத ஆசிரியர் சேவை I கொ/ சாந்த பீட்டர்ஸ் கல்லூரி கொழும்பு - 04 எஸ்.ஜி. சுவனீதா ஆசிரியர் சேவை I மா/தலல்ல வடக்கு தர்மவிஜய ம.வி. மாத்தறை எம்.ஜீ.திஸ்னா குமாரி ஆசிரியர் சேவை I சிறி சுமங்கல பெண்கள் கல்லூரி பாணந்துறை ஷெரின் கண்டம்பி ஆசிரியர் சேவை - I அனுலா வித்தியாலயம் நுகேகொட
மொழிபெயர்ப்பு	:	சி.எல்.எம் நவாஸ் ஆசிரிய ஆலோசகர் (வணிகம்) வலயக் கல்விப் பணிமனை இப்பாகமுவ
கணினிப் பக்க வடிவமைப்பு	:	காஞ்சனா சுப்ரமணியம் கணினித் தரவுப் பதிவாளர் சி.குகனேஸ்வரன் கணினித் தரவுப் பதிவாளர்
முகப்பு அட்டை வடிவமைப்பு	:	ஆர். எம். நிலுபுல் ஷெஹான் யசரத்ன கணினித் தரவுப் பதிவாளர்

உள்ளடக்கம்

பக்க எண்

பகுதி I

1 பாடக் குறிக்கோள்களும், பாட அடைவு தொடர்பான தகவல்களும்

1.1 வணிகக்கல்விப் பாடத்தின் குறிக்கோள்கள் **1**

1.2 பாட அடைவு தொடர்பான தகவல்கள்

1.2.1 இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை **2**

1.2.2 பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் **2**

1.2.3 மாவட்ட அடிப்படையில் முதற் தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் **3**

1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் **4**

1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

1.3.1 வினாப்பத்திரம் I இன் அடைவு **5**

1.3.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் **6**

1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் **6**

1.3.4 வினாப்பத்திரம் II இன் அடைவு **7**

பகுதி II

2 **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.1 **வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் தொடர்பான தகவல்கள்**

2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு **9**

2.1.2 வினாப்பத்திரம் I (1 தொடக்கம் 30 வரை) **10**

2.1.3 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் **15**

2.1.4 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பு **16**

2.1.5 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கான தெரிவை மேற்கொண்ட விதம் (சதவீதத்தில்) **17**

2.1.6 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முடிவும் ஆலோசனைகளும் **18**

2.1.7 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களும் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் **20**

2.1.8 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பு **27**

2.1.9 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம் **28**

2.1.10 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும், ஆலோசனைகளும் **29**

2.2 **வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு **30**

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் **31**

2.2.3 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் **57**

பகுதி III

3 **விடையளிக்கும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்** **58**

3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்** **59**

பகுதி I

1 பாடக் குறிக்கோள்களும், பாட அடைவு தொடர்பான தகவல்களும்

1.1 வணிகக்கல்விப் பாடத்தின் குறிக்கோள்கள்

இப்பாடத்திட்டத்தைக் கற்பதன் மூலம் மாணவர்கள்

- ★ மனிதத் தேவைகள் விருப்பங்கள் நிறைவேற்றுதல் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிறுவன அல்லது அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தீர்வுகளை அறிந்து கொள்ளக்கூடிய முறைகள் தொடர்பான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வார்.
- ★ மாற்றமுறும் வணிகச் சூழலை விளங்கிக் கொள்வதன் மூலம் அதற்கிசைவாக்கமடைவதற்குத் தேவையான திறன்களைப் பெற்றுக் கொள்வார்.
- ★ வணிகமும் அதனுடன் தொடர்புடைய துணைச் சேவைகளும் தொடர்பாகப் பெற்றுக்கொள்ளும் நியாயபூர்வமான அறிவினைச் செயற்பாட்டு ரீதியாகப் பயன்படுத்துவார்.
- ★ வணிகம் தொடர்பான எண்ணக்கருக்கள், அடிப்படைத் தத்துவங்கள் என்பவற்றைக் கற்பதற்கும் சிக்கலான பாட விடயங்களை இலகுவாகக் கிரகித்துக் கொள்வதற்குமான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வார்.
- ★ முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவத் திறன்களை விருத்தி செய்து கொள்வார்.
- ★ வணிக முறைமையொன்றின் தொழிற்பாடுகள் ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுவார்.
- ★ தேசிய, வலைய, பூகோளமயமாதல் ரீதியாக வணிகங்களில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்வார்.
- ★ இலங்கையில் சாதகமான வணிகக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான மனப்பாங்கினைக் கட்டியெழுப்பவார்.
- ★ ஒழுங்கமைக்கப்பட்ட திட்டத்துடன் வணிகங்களை ஆரம்பிப்பதற்கும், அதனை நடத்திச் செல்வதற்கும் தேவையான திறன்களைப் பெற்றுக்கொள்வார்.
- ★ தொழில் வகிபாகங்களின் கருமங்களை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்குத் தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்வார்.
- ★ சமூக பொருளாதார மேம்பாடு கருதி முகாமைத்துவம் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் திறன்களை விருத்தி செய்துகொள்வார்.
- ★ உயர் கல்வியில் ஈடுபடுவதற்கான முன் ஆயத்தத்தைப் பெற்றுக்கொள்வார்.

1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்

1.2.1 இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

மொழிமூலம்	பாடசாலை	தனிப்பட்ட	மொத்தம்
சிங்களம்	41719	3842	45561
தமிழ்	7422	930	8352
ஆங்கிலம்	1818	888	2706
மொத்தம்	**50959**	**5660**	**56619**

அட்டவணை 1

1.2.2 பரீட்சார்த்திகளினால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்

தரம்	பாடசாலைப் பரீட்சார்த்திகள்		தனிப்பட்ட பரீட்சார்த்திகள்		மொத்தம்	சதவீதம்
	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்		
A	5580	10.95	313	5.53	5893	10.41
B	9222	18.10	687	12.14	9903	17.50
C	15853	31.11	1352	23.89	17205	30.39
S	14595	28.64	1875	33.13	16470	29.09
F	5709	11.20	1433	25.32	7142	12.61
மொத்தம்	**50959**	**100**	**5660**	**100**	**56619**	**100**

அட்டவணை 2

1.2.3 மாவட்ட அடிப்படையில் முதற் தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்

மாவட்டம்	தோற்றியோரின் எண்ணிக்கை	அதி சிறந்த சித்தி (A) பெற்றோர்		விசேட திறமைச் சித்தி (B) பெற்றோர்		திறமைச் சித்தி (C) பெற்றோர்		சாதாரண சித்தி (S) பெற்றோர்		சித்தி ^A+B+C+S& பெற்றோர்		சித்தி அடையாதோர் (F)	
		எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%
1. கொழும்பு	8001	1001	12.51	1453	18.16	2459	30.73	2232	27.90	7145	89.30	856	10.70
2. கம்பஹா	4819	558	11.58	921	19.11	1387	28.78	1432	29.72	4298	89.19	521	10.81
3. களுத்துறை	2374	229	9.65	390	16.43	745	31.38	704	29.65	2068	87.11	306	12.89
4. கண்டி	2862	284	9.92	457	15.97	824	28.79	907	31.69	2472	86.37	390	13.63
5. மாத்தளை	841	55	6.54	127	15.10	274	32.58	244	29.01	700	83.23	141	16.77
6. நுவரெலியா	1075	69	6.42	172	16.00	390	36.28	327	30.42	958	89.12	117	10.88
7. காலி	2320	258	11.12	323	13.92	660	28.45	663	28.58	1904	82.07	416	17.93
8. மாத்தறை	1461	208	14.24	278	19.03	458	31.35	373	25.53	1317	90.14	144	9.86
9. அம்பாந்தோட்டை	837	89	10.63	130	15.53	224	26.76	255	30.47	698	83.39	139	16.61
10. யாழ்ப்பாணம்	950	123	12.95	152	16.00	295	31.05	278	29.26	848	89.26	102	10.74
11. கிளிநொச்சி	159	11	6.92	13	8.18	49	30.82	55	34.59	128	80.50	31	19.50
12. மன்னார்	163	16	9.82	30	18.40	52	31.90	49	30.06	147	90.18	16	9.82
13. வவுனியா	327	25	7.65	62	18.96	97	29.66	98	29.97	282	86.24	45	13.76
14. முல்லைத்தீவு	136	10	7.35	24	17.65	47	34.56	38	27.94	119	87.50	17	12.50
15. மட்டக்களப்பு	678	32	4.72	93	13.72	226	33.33	218	32.15	569	83.92	109	16.08
16. அம்பாறை	954	107	11.22	144	15.09	218	22.85	298	31.24	767	80.40	187	19.60
17. திருகோணமலை	561	54	9.63	89	15.86	151	26.92	175	31.19	469	83.60	92	16.40
18. குருநாகல்	2303	343	14.89	413	17.93	680	29.53	649	28.18	2085	90.53	218	9.47
19. புத்தளம்	1223	141	11.53	266	21.75	427	34.91	283	23.14	1117	91.33	106	8.67
20. அனுராதபுரம்	1278	194	15.18	210	16.43	357	27.93	340	26.60	1101	86.15	177	13.85
21. பொலன்னறுவை	619	63	10.18	93	15.02	164	26.49	182	29.40	502	81.10	117	18.90
22. பதுளை	1486	122	8.21	207	13.93	425	28.60	486	32.71	1240	83.45	246	16.55
23. மொனராகலை	640	51	7.97	114	17.81	228	35.63	184	28.75	577	90.16	63	9.84
24. இரத்தினபுரி	1632	106	6.50	286	17.52	552	33.82	491	30.09	1435	87.93	197	12.07
25. கேகாலை	1366	187	13.69	260	19.03	410	30.01	362	26.50	1219	89.24	147	10.76
மொத்தம்	39065	4336	11.10	6707	17.17	11799	30.20	11323	28.99	34165	87.46	4900	12.54

அட்டவணை 3

1.2.4 வகுப்பாயிடையின் அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்

வகுப்பாயிடை	மீடிறன்	மீடிறன் சதவீதம்	திரள் மீடிறன்	திரள் மீடிறன் சதவீதம்
91-100	32	0.06	56619	100.00
81-90	1274	2.25	56587	99.94
71-80	6699	11.83	55313	97.69
61-70	11064	19.54	48614	85.86
51-60	12582	22.22	37550	66.32
41-50	11973	21.15	24968	44.10
31-40	8473	14.96	12995	22.95
21-30	3651	6.45	4522	7.99
11-20	809	1.43	871	1.54
01-10	61	0.11	62	0.11
00-00	1	0.00	1	0.00

அட்டவணை 4

மேலே தரப்பட்ட அட்டவணைக்கமைய இப் பாடத்திற்காகத் தோற்றிய 56619 பரீட்சார்த்திகளுள் 31-40 என்ற வீச்சினுள் புள்ளிகளைப் பெற்றப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 8473 ஆகும். அதனைச் சதவீதமாக எடுக்கும்போது அண்ணளவாக 15% ஆகும். 40 அல்லது அதைவிடக் குறைவாகப் புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 12995 ஆவதோடு அது அண்ணளவாக 23% ஆகும்.

1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

1.3.1 வினாத்தாள் I இன் அடைவு



வரைபு 1 (RD/16/05/AL படிவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களினூடாகத் தயாரிக்கப்பட்டது.)

மேலுள்ள வரைபிற்கேற்ப பரீட்சார்த்திகளில் பெரும்பாலானோர் 01, 02, 04 ஆம் வினாக்களுக்கு சரியாக விடையளித்துள்ளனர். அவற்றின் சதவீதங்கள் முறையே 98%, 98%, 99% ஆகும். அதேபோன்று பரீட்சார்த்திகளுள் குறைந்த தொகையினர் 49ஆவது வினாவிற்கு சரியாக விடையளித்துள்ளனர். அதன் சதவீதம் 21% ஆகும்.

1.3.2 வினாத்தாள் II - இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்



உதாரணமாக, விடையளிப்பதற்கான வினாத்தெரிவின் போது 01வது வினாவினை ஏறக்குறைய 100%மானோர் தெரிவு செய்திருந்ததுடன் 07வது வினாவினை சுமார் 48%மானோர் மாத்திரமே தெரிவுசெய்துள்ளனர். வினாக்களைத் தெரிவு செய்யும்போது 1,2,3,5,8 போன்ற வினாக்களை 60% சதவீதத்திற்கு மேற்பட்டோர் தெரிவு செய்துள்ளனர்.

வரைபு 2 - (RD/16/02/AL படிவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களினூடாகத் தயாரிக்கப்பட்டது.)

1.3.3 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்



உதாரணமாக இங்கு முதலாம் வினாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் 20 ஆகும். இவ் வரைபிற்கேற்ப அப்புள்ளிகளில் 16-20 வகுப்பாயிடையில் புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகள் 14% மானோர் மாத்திரமேயாகும். 11-15 வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்றோர் ஏறக்குறைய 40% மானோர் மாத்திரமாகும். 6 - 10 வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்றோர் ஏறக்குறைய 33% ஆகும். 0 - 5 வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்றோர் ஏறக்குறைய 13% ஆகும்.

வரைபு 3 - (RD/16/02/AL படிவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களினூடாகத் தயாரிக்கப்பட்டது.)

1.3.4 வினாத்தாள் II இன் அடைவு



வரைபு 4.1 (RD/16/04/AL படிவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களினூடாகத் தயாரிக்கப்பட்டது.)



க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2017
32 - வணிகக் கல்வி - வினாத்தாள் II - பகுதி II
வினாக்களுக்கான இலகுச்சுட்டி
இலகுச் சுட்டி
1.0
0.9
0.8
0.7
0.6
0.5
0.4
0.3
0.2
0.1
0.0
வினா இலக்கம் - பிரிவுகளும் உபபிரிவுகளும்

வரைபு 4.2

பகுதி II

2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

2.1 வினாத்தாள் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் தொடர்பான தகவல்கள்

2.1.1 வினாத்தாள் I இன் கட்டமைப்பு

நேரம் 02 மணித்தியாலங்கள் மொத்தப்புள்ளிகள் 100 ஆகும்.

* 1 - 30 வரை 30 பல்தேர்வு வினாக்களையும் 31-40 வரை சுருக்கமான விடைகள் எழுதி வெற்றிடத்தைப் பூரணப்படுத்தும் 10 வினாக்களையும் 41-50 வரை சுருக்க விடை எழுதும் 10 வினாக்களையும் உள்ளடக்கியுள்ளது.
* சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
* ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகளாகும்.

2.1.2 வினாப்பத்திரம் I (வினா இலக்கம் 1 தொடக்கம் 30 வரை)

1. பின்வருவன மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்கள் தொடர்பிலான சில குணாம்சங்கள் ஆகும்.

A - வரையறுக்கப்படாதவை　　B - உருவாக்கக்கூடிய ஆற்றல் கொண்டவை
C - பலவகைப்பட்டவை　　D - உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானவை
E - வரையறுக்கப்பட்டவை　　F - பொதுவானவை

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் மனித விருப்பங்களுக்கான குணாம்சங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, D　(2) A, B, C　(3) A, C, E　(4) B, D, E　(5) B, D, F　(……)

2. பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது ஊடகத்துறை தொடர்பிலான அக்கறையுடைய சில தரப்பினரையும் **Y** நிரலானது அவர்களது அக்கறைக்கான சில காரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. நிருபர்கள்	1. ஊடகத் தொழில்வாண்மையாளர்களுக்கான உரிமைகளை உறுதி செய்வதற்கு
B. பொது மக்கள்	2. தகவல்களைச் சேகரிப்பதற்கு
C. அரசாங்கம்	3. தகவல்களை முகாமை செய்வதற்கு
D. ஊடகத் தொழில்வாண்மையாளர்களின் தொழிற்சங்கங்கள்	4. தகவல்கள் ஊடாக விழிப்படையச் செய்வதற்கு
E. ஊடக நிறுவகங்களின் நிர்வாகிகள்	5. தகவல்கள் தொடர்பான கொள்கைகளை உருவாக்குவதற்கு

அக்கறையுடைய தரப்பினரையும் அவர்களது அக்கறைக்கான காரணங்களையும் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 2, C - 5, D - 3, E - 4　(2) A - 1, B - 3, C - 4, D - 5, E - 2
(3) A - 2, B - 4, C - 5, D - 1, E - 3　(4) A - 3, B - 1, C - 2, D - 4, E - 5
(5) A - 5, B - 2, C - 3, D - 4, E - 1　(……)

3. பின்வருவன வணிகம் ஒன்று தொடர்பான சூழல்சார் காரணிகளது சில போக்குகள் ஆகும்.

A - பொருளாதார விலை மட்டத்திலான அதிகரிப்பு
B - தொழில் தருனர் - தொழில் பெறுனர் முரண்பாடுகளில் அதிகரிப்பு
C - போட்டியில் அதிகரிப்பு
D - தொழில் பெறுனர் திரும்பலில் குறைவு
E - நிறுத்தி வைத்த உழைப்புக்களில் குறைவு
F - நுகர்வோர் சங்கங்களின் பலத்தில் அதிகரிப்பு
G - மூலப்பொருட்கள் வீணாகுவதில் குறைவு
H - வயது முதிர்ந்தோர் சனத்தொகையில் அதிகரிப்பு

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் அகச் சூழல் காரணிகளின் போக்குகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?

(1) A, B, C, D　(2) A, D, E, G　(3) B, C, E, H　(4) B, D, E, G　(5) C, F, G, H　(……)

4. பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது வணிக நிறுவகங்களின் வித்தியாசமான வகைகளையும் **Y** நிரலானது அவை பதிவு செய்யப்பட வேண்டிய நிறுவகங்களின் பட்டியலையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. பங்குத்தரகுத் தொழில் கம்பனிகள்	1. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
B. காப்புறுதிக் கம்பனிகள்	2. இலங்கை மத்திய வங்கி
C. உரிமம் பெற்ற வங்கிகள்	3. இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு
D. கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்	4. இலங்கைக் காப்புறுதிச் சபை

வணிக நிறுவகங்களின் வகைகளையும் அவை பதிவு செய்யப்பட வேண்டிய நிறுவகங்களையும் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 3, C - 2, D - 4　(2) A - 4, B - 1, C - 3, D - 2
(3) A - 1, B - 2, C - 4, D - 3　(4) A - 3, B - 4, C - 2, D - 1
(5) A - 3, B - 1, C - 2, D - 4　(……)

5. வாடிக்கையாளர் ஒருவர் குறித்த பண்டக்குறிப் பெயரைக் கொண்ட தகரத்திலடைத்த உணவுப்பொருளொன்றை வணிகரிடம் கேட்ட போது அவர் வித்தியாசமான பண்டக்குறிப் பெயரையுடைய தகரத்திலடைத்த உணவுப் பொருளொன்றை வழங்கினார். அந்த உற்பத்திப்பொருளில் உள்ளடங்கியுள்ள பொருட்கள் பற்றி அதன் சுட்டுத்துண்டின் மீது எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. வாடிக்கையாளர் அது பற்றி வணிகரிடம் விசாரித்த போதும் அவர் அதனைக் கருத்திற் கொள்ளவில்லை. மேலே தரப்பட்ட நிகழ்வின்படி மீறப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகளின் எண்ணிக்கை

(1) 2 ஆகும்.　(2) 3 ஆகும்.　(3) 4 ஆகும்.　(4) 5 ஆகும்.　(5) 6 ஆகும்.　(……)

6. வணிக நிறுவனங்களுடன் தொடர்புடையதான சில குணாம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - தொகுதிக் கடன்களை வழங்கக்கூடிய ஆற்றல்
B - வரையறுக்கப்படாத நட்டப் பொறுப்பு
C - சட்ட ஆளுமையின்மை
D - வணிகத்தை பதிவு செய்தல் கட்டயாமானது.
E - சுதந்திரமான தீர்மானம் எடுத்தல்
F - நிதிக்கூற்றுக்களைப் பிரசுரித்தல் கட்டாயமானது.

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் தனியுடைமை வணிகத்துக்குப் பொருத்தமான குணாம்சங்களைக் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, C, E (3) B, C, E (4) B, D, F (5) C, D, F (……)

7. பங்குடைமை வணிகங்கள் தொடர்பிலான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பங்காளர்களுக்கிடையே எழுத்து வடிவிலான உடன்படிக்கை காணப்படுதல் அத்தியாவசியமானதாகும்.
B - வியாபாரப் பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் அத்தியாவசியமானதாகும்.
C - சட்ட ஆளுமை காணப்படுவதில்லை.
D - ஆகக்கூடிய பங்காளர் எண்ணிக்கையைப் பங்குடைமை உடன்படிக்கை தீர்மானிக்கின்றது.
E - பங்காளர்களின் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படவில்லை.

மேலே தரப்பட்டவற்றுள் பங்குடைமை வணிகங்கள் தொடர்பிலான சரியான கூற்று/கூற்றுக்கள்

(1) C மட்டும். (2) C, E ஆகியன மட்டும்.
(3) C, D, E ஆகியன மட்டும். (4) A, B, C, E ஆகியன மட்டும்.
(5) A, B, C, D, E ஆகியன யாவும். (……)

8. வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றின் இயல்பு **அல்லாதது**

(1) பங்குதாரர் எண்ணிக்கையின் மீது உச்ச நிர்ணயமின்மை.
(2) பணிப்பாளர்களின் எண்ணிக்கை மீது உச்ச நிர்ணயமின்மை.
(3) பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடுதல் கட்டாயமானது.
(4) பங்கிலாபங்களைப் பிரேரிப்பதற்கு முன்பு கடன் கொடுத்துத் தீர்க்கும் ஆற்றல் பரிசோதனை தேவையானது.
(5) பங்குகளை பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய ஆற்றல். (……)

9. பின்ருவனவற்றுள் மிகச் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) முயற்சியாளர் ஒரு வணிகர் ஆவார்.
(2) முயற்சியாளர் ஒரு முகாமையாளர் ஆவார்.
(3) முயற்சியாளர் ஒரு தொழில்வாண்மையாளர் ஆவார்.
(4) முயற்சியாளர் ஒரு பகுப்பாய்வாளர் ஆவார்.
(5) முயற்சியாளர் ஒரு வாய்ப்பைத் தேடுபவர் ஆவார். (……)

10. பின்வருவனவற்றுள் வைப்புக்களை ஏற்க **முடியாத** நிதி நிறுவக வகை

(1) நம்பிக்கை அலகுகள். (2) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்.
(3) உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள். (4) பிராந்திய அபிவிருத்தி வங்கிகள்.
(5) உரிமம் பெற்ற வணிக வங்கிகள். (……)

11. பின்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கியின் நேரடி மேற்பார்வையின் கீழ் வரும் நிறுவக வகைகளின் எண்ணிக்கை யாது?

A - உரிமம் பெற்ற வணிக வங்கிகள்
B - உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள்
C - உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்
D - கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்
E - சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்கள்

(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5 (……)

12. பின்வருவன இலத்திரனியல் கடனட்டை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள சில தகவல்கள் ஆகும்.

A - கடனட்டைச் சங்கத்தின் இலச்சினை
B - அட்டை இலக்கம்
C - காந்தத் தன்மை கொண்ட பட்டி
D - அட்டை உரிமையாளரின் பெயர்
E - அவசர தொலைபேசி இலக்கம்
F - காலாவதியாகும் திகதி
G - கையெழுத்துப் பட்டி

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் இலத்திரனியல் கடனட்டையின் முகப்பில் காணப்படும் தகவல்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?

(1) A, B, E, F (2) A, B, D, F (3) B, C, E, G (4) C, E, F, G (5) D, E, F, G (……)

13. மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய சில இடர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - தேய்வு B - விபத்துக்கள்
C - களவு D - சந்தைப் பெறுமதியில் வீழ்ச்சி
E - விற்பனையின் மூலமாக உருவாகும் நட்டம் F - மூன்றாந் தரப்பினருக்கான இழப்பு

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் மோட்டார் வாகனக் காப்புறுதியின் கீழ் காப்புறுதி செய்யக்கூடிய இடர்களைக் கொண்டுள்ள தொகுதி யாது?

(1) A, B, C (2) A, C, D (3) A, E, F (4) B, C, D (5) B, C, F (......)

14. பின்வருவனவற்றுள் காப்புறுதியுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) எந்தவோர் இடரும் காப்புறுதி செய்யக்கூடியதாகும்.
(2) வாடகைக்காரருக்கு தாம் வசிக்கும் வீட்டைக் காப்புறுதி செய்வதற்கான உரிமை உண்டு.
(3) ஆதனமானது பல கம்பனிகளில் காப்புறுதி செய்யப்பட்டுள்ள போது அவ்வாதனத்திற்கு இழப்பொன்று ஏற்படும் பட்சத்தில் ஒவ்வொரு கம்பனியில் இருந்தும் தனித்தனியாக நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.
(4) தொழில் வழங்குனர் தனது ஊழியர்களைக் காப்புறுதி செய்துகொள்ள முடியும்.
(5) இழப்பீட்டுத் தத்துவமானது ஆயுளுறுதிக்குப் பொருத்தமானதாகும். (......)

15. பின்வருவனவற்றுள் போக்குவரத்து முறைமையுடன் தொடர்புடைய சரியான கூற்று எது?

(1) பேருந்து நிலையமானது போக்குவரத்துத் தரிப்பிடத்தின் ஒரு கூறு ஆகும்.
(2) புகையிரதப் பாதையானது போக்குவரத்து முறைமையின் ஒரு கூறு ஆகும்.
(3) ஆகாய விமானமானது போக்குவரத்துச் சக்தியின் ஒரு கூறு ஆகும்.
(4) கப்பலானது போக்குவரத்துப் பாதையின் ஒரு கூறு ஆகும்.
(5) துறைமுகமானது போக்குவரத்து முறைமையின் ஒரு கூறு ஆகும். (......)

16. முகாமைத்துவக் கருமங்களுடன் தொடர்புடைய சில பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - தொழிற் பிரிப்பு B - சூழல்சார் பகுப்பாய்வு
C - கூட்டிணைப்பு D - நோக்கங்களை ஸ்தாபித்தல்
E - பணிகளை இனங்காணுதல் F - திணைக்களப்படுத்தல்
G - தொடர்பாடல்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் ஒழுங்கமைத்தலுக்கான பணிகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?

(1) A, B, C, F (2) A, B, D, G (3) A, C, D, G (4) A, C, D, E (5) A, C, E, F (......)

17. பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது சில செயற்பாட்டு நடவடிக்கைகளையும் **Y** நிரலானது சில செயற்பாட்டு முகாமைத்துவத் தொழிற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

X	Y
A. உற்பத்தி செய்தலுக்கான ஊழியத் தேவைப்பாட்டைத் தீர்மானித்தல்	1. விநியோகச் சங்கிலி முகாமைத்துவம்
B. சரக்கிருப்புக் கட்டுப்பாடுகள்	2. உற்பத்தி செய்தலுக்கான பொறியியல்
C. உற்பத்திக்கான அட்டவணைகளைத் தயாரித்தல்	3. உற்பத்திக் கட்டுப்பாடுகள்
D. வழங்குனர்களுக்கான அபிவிருத்தி	4. உற்பத்தித் திட்டமிடல்

செயற்பாட்டு நடவடிக்கைகளையும் செயற்பாட்டு முகாமைத்துவத் தொழிற்பாடுகளையும் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 2, C - 3, D - 4 (2) A - 2, B - 1, C - 4, D - 3
(3) A - 2, B - 3, C - 1, D - 4 (4) A - 3, B - 4, C - 2, D - 1
(5) A - 4, B - 3, C - 2, D - 1 (......)

18. பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது சந்தைப்படுத்துவோர் நோக்கில் இருந்து சந்தைப்படுத்தற் கலவையையும் **Y** நிரலானது நுகர்வோர் நோக்கில் இருந்து சந்தைப்படுத்தற் கலவையையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. உற்பத்திப்பொருள்	1. வசதி
B. விலை	2. தொடர்பாடல்
C. மேம்படுத்தல்	3. நுகர்வோர் தீர்வு (தேவைகள், விருப்பங்கள்)
D. இடம் (விநியோகம்)	4. கிரயம்

சந்தைப்படுத்துவோர் நோக்கில் இருந்தும் நுகர்வோர் நோக்கில் இருந்தும் சந்தைப்படுத்தற் கலவையைச் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 2, C - 3, D - 4 (2) A - 2, B - 1, C - 3, D - 4
(3) A - 2, B - 3, C - 4, D - 1 (4) A - 3, B - 4, C - 2, D - 1
(5) A - 3, B - 4, C - 1, D - 2 (......)

19. நிதி முகாமைத்துவத் தீர்மானங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A -	குறுங்கால முதலீடு	B -	செலுத்தத்தக்க செலவுகள்
C -	பங்கிலாபங்களின் பகிர்வு	D -	கடன் மூலதனம்
E -	மூலதன ஒதுக்கங்கள்	F -	உரிமை மூலதனம்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் மூலதன அமைப்பு தொடர்பான தீர்மானங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?

(1) A, B, E (2) A, D, E (3) B, E, F (4) C, D, E (5) D, E, F (……)

20. உற்பத்தி நிறுவனம் ஒன்றில் தற்போது 80 இயந்திர இயக்குநர்கள் காணப்படுவதுடன் இங்கு உற்பத்தி செய்யப்படும் தொகைக்கும் இயந்திர இயக்குநர்களின் எண்ணிக்கைக்கும் இடையே நேரடித் தொடர்பு காணப்படுகின்றது. நிறுவனமானது எதிர்வரும் வருடங்களில் உற்பத்தியை 25% ஆல் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது. 16 இயந்திர இயக்குநர்கள் தமது இராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பித்துள்ளதுடன் 04 இயந்திர இயக்குநர்கள் அடுத்த வருடத்தில் இளைப்பாறவுள்ளனர். 05 இயந்திர இயக்குநர்கள் மேற்பார்வையாளர் தரத்துக்கு பதவியுயர்த்தப்படவுள்ளனர். நிறுவன ஆட்சேர்ப்புக் கொள்கையின்படி 40% ஊழியர் தேவைப்பாடு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படவேண்டுமெனின் உள்வாரியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படவேண்டிய இயந்திர இயக்குநர்கள் எத்தனை பேர்?

(1) 13 (2) 18 (3) 20 (4) 21 (5) 27 (……)

21. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) தொலை இயக்கி (Remote Controller) ஒரு நிலைபொருள் (Firmware) ஆகும்.
(2) மத்திய செயன்முறைப்படுத்தல் அலகு (CPU) ஒரு உயிர்ப்பொருள் ஆகும்.
(3) காட்சித்திரை (Monitor) ஒரு மென்பொருள் ஆகும்.
(4) முறைமைச் செயற்படுத்துனர் ஒரு வன்பொருள் ஆகும்.
(5) இணையத்தளம் ஒரு தரவு ஆகும். (……)

22. இறக்குமதிச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் 'நாணயக் கடிதத்துடன்' **சம்பந்தப்படாத** தரப்பினர்
(1) இறக்குமதியாளர் (2) ஏற்றுமதியாளர்
(3) இறக்குமதியாளர் வங்கி (4) ஏற்றுமதியாளர் வங்கி
(5) காப்புறுதிக் கம்பனி (……)

23. அளவுசார் மற்றும் பண்புசார் முறையில் தகவல்களை வகைப்படுத்தலுக்கான நியதி
(1) மூலம் (2) முகாமைத்துவ மட்டங்கள் (3) நிகழ்தகவு
(4) தன்மை (5) நேரம் (……)

24. 'வேலை விவரணம்' என்பது வேலை ஒன்றுக்கான,
(1) பணிகள், கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் வேலைவாய்ப்பு நிபந்தனைகளை உள்ளடக்கிய பட்டியல் ஆகும்.
(2) தகுதிகள், பொறுப்புக்கள், பணிகள் மற்றும் தகவல்களை உள்ளடக்கிய பட்டியல் ஆகும்.
(3) தகுதிகள், பொறுப்புக்கள், கடமைகள் மற்றும் பணிகளை உள்ளடக்கிய பட்டியல் ஆகும்.
(4) பணிகள், தொழில் பெறுனர் பண்புகள், கடமைகள் மற்றும் தகுதிகளை உள்ளடக்கிய பட்டியல் ஆகும்.
(5) கடமைகள், அனுபவங்கள், வேலைவாய்ப்பு நிபந்தனைகள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்கிய பட்டியல் ஆகும். (……)

25. நிறுவகம் ஒன்று ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள ஊழியர்களை உள்ளடக்கிய வகையில் அமைந்த செயற்குழுவின் மூலம் தொழிற்பாட்டுத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 2018-2020 காலப்பகுதிக்கான வணிகத்தின் கூட்டுருத் திட்டத்தைத் தயாரித்தது. இக்கூற்றில் உள்ளடங்கியுள்ள திட்டமிடல் தத்துவங்களின் எண்ணிக்கை

(1) 1 ஆகும். (2) 2 ஆகும். (3) 3 ஆகும். (4) 4 ஆகும். (5) 5 ஆகும். (……)

26. 'உறவுமுறைச் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு' என்பதனை மிகச் சிறந்த முறையில் விபரிக்கும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கிய கூற்று
(1) வாடிக்கையாளரின் நீண்டகாலத் திருப்தியையும் நம்பிக்கையையும் உறுதி செய்தல்
(2) சமூகத்தின் நீண்டகால தேவைகளைத் திருப்தி செய்தல்
(3) சமூக வலைப்பின்னல்களைப் பயன்படுத்துவதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளல்
(4) இறுதி வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் சேவைகளை விற்பனை செய்தல்
(5) சந்தைப் போட்டிக்கு முகங்கொடுக்கத்தக்கதாக விற்பனை மேம்படுத்தலைப் பயன்படுத்தல் (……)

27. ஊழியர்களைத் தெரிவுசெய்யும் போது பயன்படுத்தப்படும் பரீட்சை முறையையும் அதன் நோக்கத்தையும் மிகச் சரியாகக் குறிப்பிடும் கூற்றைத் தெரிவுசெய்க.
(1) வித்தியாசமான மன ஆற்றல்களைப் பரீட்சிப்பதற்கு நுண்ணறிவுப் பரீட்சை பயன்படுத்தப்படும்.
(2) சூழ்நிலைக்கு முகங்கொடுக்கும் ஆற்றலைப் பரீட்சிப்பதற்கு பின்புலப் பரீட்சை பயன்படுத்தப்படும்.
(3) விசேட தொழில்சார் திறன்களைப் பரீட்சிப்பதற்கு மருத்துவப் பரீட்சை பயன்படுத்தப்படும்.
(4) கல்வித் தகைமையைப் பரீட்சிப்பதற்கு செய்முறைப் பரீட்சை பயன்படுத்தப்படும்.
(5) கையெழுத்துக்களைப் பரீட்சிப்பதற்கு பொது உளசார்புப் பரீட்சை பயன்படுத்தப்படும். (……)

28. வணிகத் திட்டம் தயாரிப்பதன் பிரதான நோக்கம்
(1) தேவையான மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளலாகும்.
(2) வணிகத்தின் சாத்தியத்தன்மையை மதிப்பிடுதலும் அதனைக் கொண்டு நடாத்துவதற்கான வழிகாட்டல்களுமாகும்.
(3) வித்தியாசமான தரப்பினருக்கு வணிகம் தொடர்பிலான விழிப்புணர்வை வழங்குதலாகும்.
(4) வணிகத்துக்குப் பொருத்தமான இடஅமைவைத் தெரிவுசெய்தலாகும்.
(5) அரசாங்க ஊக்குவிப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாகும். (……)

29. காசோலையின் மீது 'வரையுனரை விசாரிக்குக' எனும் குறிப்பு எச்சந்தர்ப்பத்தில் இடப்படும்?
(1) வரையுனர் கொடுப்பனவை நிறுத்தியிருக்கும் சந்தர்ப்பத்தில்
(2) வரையுனர் கொடுத்துத் தீர்க்க இயலாத சந்தர்ப்பத்தில்
(3) காசோலையில் எழுத்துப் பிழை காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில்
(4) கணக்கில் பற்றாக்குறையான பணம் காணப்படும் சந்தர்ப்பத்தில்
(5) 'சட்டப்படியான' அறிவித்தல் (நீதிமன்ற உத்தரவு) காணப்படும் சந்தர்ப்பத்தில் (……)

30. சந்தைப்படுத்தல் முகாமையாளர்களால் மக்கட் தொகைச் சூழலைப் பகுப்பாய்வு செய்வதில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அண்மிய காரணமாக அமையத்தக்கது
(1) நுகர்வோரின் தேவைகள் மற்றும் விருப்பங்களை அறிந்து கொள்ளல்
(2) நுகர்வோர் நடத்தை மாறுபாடுகளை இனங்காணுதல்
(3) சந்தைத் துண்டங்களின் அளவு மற்றும் வளர்ச்சியை இனங்காணுதல்
(4) வணிகச் சுழற்சியை எதிர்வுகூறல்
(5) அரசியல் மாற்றங்களை இனங்காணுதல் (……)

2.1.3. வினாத்தாள் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

வினா இலக்கம்	விடை	வினா இலக்கம்	விடை
01.	2	16.	5
02.	3	17.	5
03.	4	18.	4
04.	4	19.	5
05.	2	20.	5
06.	3	21.	1
07.	2	22.	5
08.	3	23.	4
09.	5	24.	1
10.	1	25.	3
11.	3	26.	1
12.	2	27.	1
13.	5	28.	2
14.	4	29.	4
15.	1	30.	3

அட்டவணை 5

சரியான ஒரு விடைக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் 60 ஆகும்.

2.1.4 வினாத்தாள் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பு :



வரைபு 5
பரீட்சார்த்திகளில் குறைந்த சதவீதமானோரே 30 ஆம் வினாவிற்குச் சரியான துலங்கலைக் காட்டியுள்ளனர். இதன் இலகுதன்மை 35% ஆகும்.

2.1.5 வினாத்தாள் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கான தெரிவை மேற்கொண்ட விதம் (சதவீதத்தில்)

வினா இலக்கம்	சரியான தெரிவு	ஒவ்வொரு தெரிவையும் தெரிவு செய்த பரீட்சார்த்திகளின் சதவீதங்கள்					
		1	2	3	4	5	Missing
1	2	0.83	**98.27**	0.40	0.27	0.23	-
2	3	0.47	0.77	**98.33**	0.17	0.20	0.06
3	4	1.23	3.07	1.97	**91.97**	1.56	0.20
4	4	0.23	0.37	0.03	**99.17**	0.13	0.07
5	2	16.67	**59.77**	18.20	3.23	1.73	0.40
6	3	0.26	2.50	**95.37**	0.70	0.97	0.20
7	2	7.87	**61.10**	9.40	14.50	6.77	0.36
8	3	4.34	26.83	**43.40**	20.03	4.93	0.47
9	5	5.60	12.10	2.40	6.43	**73.33**	0.14
10	1	**67.97**	12.40	8.70	9.20	1.23	0.50
11	3	3.53	13.23	**71.27**	7.24	3.93	0.80
12	2	14.14	**76.50**	5.20	2.40	1.43	0.33
13	5	2.73	0.80	0.80	2.00	**93.50**	0.17
14	4	2.80	9.77	8.87	**72.80**	5.53	0.23
15	1	**92.23**	3.93	1.20	1.08	1.43	0.13
16	5	8.53	4.43	7.07	13.47	**65.83**	0.67
17	5	0.67	10.40	10.57	4.00	**73.83**	0.53
18	4	0.33	0.60	0.23	**92.47**	6.20	0.17
19	5	1.33	7.47	3.63	7.63	**79.60**	0.34
20	5	8.63	16.53	17.77	12.57	**43.57**	0.93
21	1	**48.57**	13.50	12.90	3.33	21.10	0.60
22	5	1.33	3.90	3.23	7.80	**83.50**	0.24
23	4	10.80	10.10	2.97	**73.50**	2.30	0.33
24	1	**69.43**	15.80	6.93	3.80	3.83	0.21
25	3	4.97	20.40	**43.50**	24.50	5.87	0.76
26	1	**56.10**	10.47	17.03	9.10	6.70	0.60
27	1	**58.10**	24.30	1.07	14.57	1.73	0.23
28	2	6.00	**63.13**	28.20	1.87	0.60	0.20
29	4	35.74	3.40	10.27	**39.83**	10.43	0.33
30	3	36.73	23.90	**35.47**	2.13	1.33	0.44

அட்டவணை 6

* ஒவ்வொரு வினாவிற்கும் எதிரே சரியான தெரிவினைச் செய்துள்ள பரீட்சார்த்திகளின் சதவீதம் நிறந்தீட்டிக் காட்டப்பட்டுள்ளது.
* வினாவுக்கான எந்தவொரு தெரிவினையும் தெரிவு செய்யாத பரீட்சார்த்திகளின் சதவீதமானது Missing எனக் காட்டப்பட்டுள்ளது.
* வினாத்தாள் I இல் 01 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும் போது விடைத்தெரிவுகளின் சதவீதம் காட்டப்பட்டுள்ளது.

  உதாரணம் : 04 ஆவது வினாவிற்கு பரீட்சார்த்திகளுள் கூடுதலான அதாவது 99%மானோர் சரியான துலங்கலைக் காட்டியுள்ளனர்.

2.1.6 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முடிவுகளும் ஆலோசனைகளும் :

1-30 வரையான பல்தேர்வு வினாக்களைக் கவனத்திற்கொள்ளும்போது 08,20,21,25,29,30 ஆகிய வினாக்களில் மாணவர்களுக்கான இலகுதன்மை 50% இனை விடக் குறைவாகும். அவ்வினாக்களுக்குரிய அலகுகளும் மற்றும் ஒவ்வொரு வினாவினதும் இலகுதன்மையும் கீழே தரப்பட்டுள்ளன.

வினா இலக்கம்	பாட அலகு	இலகுதன்மை
08	வணிக அமைப்புக்கள்	43%
20	மனிதவள முகாமைத்துவம்	44%
21	வணிக தகவல் முறைமை	49%
25	வணிக முகாமைத்துவம்	44%
29	பணமும் வங்கியும்	40%
30	சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்	35%

வினா இலக்கம் 08 (அலகு - வணிக அமைப்புகள்)

இவ்வினாவின் சரியான விடையாகிய 3ஆவது தெரிவுக்கு பரீட்சார்த்திகளில் 43% மானோர் மாத்திரமே சரியான துலங்கலைக் காட்டியுள்ளனர். வினாவில் கேட்கப்பட்ட அடிப்படை விடயம் தொடர்பிலான சரியான விளக்கம் காணப்படாமையே கூடுதலான பரீட்சார்த்திகளின் பிழையான தெரிவினைச் செய்வதற்கான காரணமாகும். ஒவ்வொரு வணிக அமைப்புக்களினதும் பண்புகள் தொடர்பிலான சரியான விளக்கத்தை பெற்றுக்கொடுக்கக்கூடியவாறு கற்றல் கற்பித்தற் செயன்முறை ஒழுங்குபடுத்தப்படல் பொருத்தமானதாகும்.

வினா இலக்கம் 20 (அலகு - மனிதவள முகாமைத்துவம்)

இவ்வினாவின் சரியான விடையாகிய 5ஆவது தெரிவிற்கு 44% மானோர் மாத்திரமே சரியான துலங்களைக் காட்டியுள்ளனர். கூடுதலான பரீட்சார்த்திகள் பிழையான தெரிவினை தெரிவு செய்தமைக்கு நிகழ்வின் உதவியுடன் கேட்கப்பட்ட பிரச்சினையைத் தீர்க்கமுடியாமல் போனமையே காரணமாகும். எனவே கோட்பாட்டுரீதியான அறிவிற்கு ஏற்புடையதாக செயற்பாட்டுரீதியான நிகழ்வுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வகுப்பறையில் கவனம் செலுத்த வேண்டும்.

வினா இலக்கம் 21 (வணிகத் தகவல் முறைமை)

இவ்வினாவின் சரியான விடையாகிய முதலாவது தெரிவிற்கான துலங்கல்களை விண்ணப்பதாரிகளுள் 49% மானோர் மாத்திரமே சரியான துலங்கலைக் காட்டியுள்ளனர். வணிக தகவல் முறைமை தொடர்பிலான எண்ணக்கருரீதியான விளக்கம் காணப்படாமையே கூடுதலானோர் பிழையான விடையைத் தெரிவு செய்தமைக்கான காரணமாகும். எனவே தகவல் முறைமை தொடர்பிலான கோட்பாட்டுரீதியான அறிவானது காலத்துக்கேற்றவாறு பிரயோகரீதியான செயன்முறைகளுடன் கற்றல் கற்பித்தற் செயன்முறையானது ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

வினா இலக்கம் 25 (அலகு - வணிக முகாமைத்துவம்)

இவ்வினாவின் சரியான விடையாகிய 3ஆவது தெரிவிற்கு பரீட்சார்த்திகளுள் 44%மானோர் மாத்திரமே சரியான துலங்கலைக் காட்டியுள்ளனர். இவ்வினாவில் கேட்கப்பட்ட திட்டமிடலின் அடிப்படைகள் தொடர்பிலான தெளிவான விளக்கம் காணப்படாமையே கூடுதலானோர் இதற்கான பிழையான விடையைத் தெரிவுசெய்தமைக்கான காரணமாகும் திட்டமிடலின் அடிப்படைகள் தொடர்பிலான கோட்பாட்டு ரீதியான விடயங்களை மிகச் சரியான முறையில் மனதில் நிற்கக் கூடியவாறு பரீட்சார்த்திகளை பிரயோகரீதியான செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

வினா இலக்கம் 29 (அலகு - பணமும் வங்கியும்)

இவ்வினாவின் சரியான விடையாகிய நான்காவது தெரிவிற்கு பரீட்சார்த்திகளுள் 40% மானோர் மாத்திரமே சரியான துலங்களைக் காட்டியுள்ளனர். இவ்வினாவிற்கு சரியான விடையளிப்பதில் பரீட்சார்த்திகள் தவறியுள்ளனர். எனவே காசோலைப் பாவனை தொடர்பான பிரயோகரீதியான செயற்பாடுகளை உள்ளடக்கி கற்றல் கற்பித்தற் செயன்முறைகளை வகுப்பில் மேற்கொள்வது பொருத்தமானதாகும்.

வினா இலக்கம் 30 (அலகு - சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்)

இவ்வினாவின் சரியான விடையாகிய 3ஆவது தெரிவிற்கு பரீட்சார்த்திகளுள் 35% மான குறைந்த சதவீதத்தினோர் மாத்திரமே துலங்கலைக் காட்டியுள்ளனர். சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள் மக்களின் விஞ்ஞானச் சூழலை பகுப்பாய்வு செய்வதில் செல்வாக்கு செலுத்துகின்ற அண்மிய காரணியை சரியாக இனங்கண்டு விடையளிக்காமையே இதற்குக் காரணமாகும். இவ்வாறான பிரச்சினைகளுக்கு விடையளிப்பதற்கு வகுப்பறையினுள் பொருத்தமான ஒப்படைகளை வழங்கி பரீட்சார்த்திகளின் பாடம் தொடர்பான விளக்கத்தை விரிவுபடுத்தல் வேண்டும்

2.1.7 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களும் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

- 31 தொடக்கம் 40 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை **பொருத்தமான பதங்களைப் பயன்படுத்தி** நிரப்புக.

31. (அ) பொருட்கள் சேவைகளுக்கான கேள்வியானது .... அடிப்படையில் உருவாவதுடன் அது .... ஊடாக ஒரு பயனுறுதிமிக்க கேள்வியாக மாற்றமடையும்.

(ஆ) ஒரு நாட்டின் .... மற்றும் .... வணிகங்கள் பங்களிப்புச் செய்கின்றன.

விடைகள்

(அ) விருப்பத்தின்
கொள்வனவு சக்தி / கொள்வனவு ஆற்றல்

(ஆ) நீடித்த வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும்

32. (அ) சிறந்தவற்றை அமுல்படுத்தும் வகையில் வணிக நடவடிக்கைகளை நல்லவையா கெட்டவையா என மதிப்பிடுவது வணிக .... எனவும் மனித மற்றும் இயற்கைச் சூழல் அபிவிருத்தியை நோக்கிய வகையிலான வணிகங்கள் சார்பான கடப்பாடுகள் .... எனவும் அழைக்கப்படும்.

(ஆ) புகையிலை மற்றும் மதுபான வகைகளுக்கான வரிகள் .... திணைக்களத்தின் மூலம் சேகரிக்கப்படும் அதேவேளை உழைக்கும் போது செலுத்த வேண்டிய வரிகள் (PAYE) .... திணைக்களத்தின் மூலம் சேகரிக்கப்படுகின்றது.

விடைகள்

(அ) ஒழுக்கம்,
சமூக பொறுப்பு / பொறுப்புகள்

(ஆ) கலால் / மதுவரி / (Excise)
உள்நாட்டு இறைவரித் (Inland Revenue)

33. (அ) சர்வதேச வியாபார உடன்படிக்கை ஒன்றின் பிரதான நோக்கங்களாவன, பொருட்கள் சேவைகளுக்கான .... உருவாக்குவதும் சர்வதேச .... அபிவிருத்தி செய்வதும் ஆகும்.

(ஆ) கொடுப்பனவுகள் துரிதப்படுத்தப்படுவதனை .... கழிவுகள் ஊக்குவிக்கும் அதே வேளை கூடுதலான அளவு பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதனை .... கழிவுகள் ஊக்குவிக்கின்றன.

விடைகள்

(அ) சந்தையை
தொடர்புகளை உறவுகளை / ஒத்துழைப்பு

(ஆ) காசுக்(Cash)
கணியக்(Quantity)

34. (அ) கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்திலுள்ள எந்தவொரு பட்டியல்படுத்திய கம்பனியின் பண்புகளும் நிதிச் சாத்தியம், ... மற்றும் .... ஆகிய நியதிகளைப் பூர்த்தி செய்பவையாக இருந்தால் மட்டுமே S&PSL20 சுட்டியில் உள்ளடக்கப்படுவதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்ளும்

(அ) நிதியைத் திரட்டுவதில் உடைமையை மாற்றாமல் குத்தகைக்கு எடுத்தவர் ஆதனத்தைப் பயன்படுத்துவதற்கு .... குத்தகை அனுப்பதிப்பதுடன் இடர்கள் மற்றும் திரும்பல்களை மாற்றக் கூடியதாக குத்தகைக்கு எடுத்தவர் ஆதனத்தை பயன்படுத்துவதற்கு .... குத்தகை அனுமதிக்கிறது.

விடைகள்

(அ) திரவத்தன்மை (Liqudity), பருமன் (Size)

(ஆ) செயற்பாட்டுக் (Operational)
நிதிக் (Finance)

35. (அ) தொடர்பாடல் செய்முறைக்கு உரித்தான பின்வரும் உருவிலுள்ள இடைவெளிகளை நிரப்புக



விடைகள்

1. எண்ணம் (Idea)
2. குறிமுறைப்படுத்தல் (Encoding)
3. குறிநீக்கம் (Decoding)
4. துலங்கல் / பின்னூட்டல் (Response / Feedback)

36. (அ) அதிகாரம் வழங்கப்பட்ட வழியின் அடிப்படையில் ஒழுங்கமைப்பானது .... மற்றும் .... என வகைப்படுத்த முடியும்.

(ஆ) கூட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதில் முகாமையாளர்கள் அடிப்படையில் .... திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் அவர்கள் .... திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விடைகள்

(அ) மையப்படுத்தல், பன்முகப்படுத்தல்

(ஆ) எண்ணக்கருவாக்கத்
தொழில்நுட்பத்

37. பின்வரும் சமன்பாடுகளை தொடர்பில் சரி பிழை கூறுக

	சமன்பாடு	சரி / பிழை
1.	சமன்பாட்டுப் = புள்ளிநிலையான கிரயம் ÷ பங்களிப்பு	....
2.	பங்களிப் = அலகுக்கான விற்பனை விலை ÷ அலகுக்கான மாறும் கிரயம்	....
3.	விரைவு விகிதம் = மொத்தச் சொத்துக்கள் ÷ நடைமுறைப் பொறுப்புகள்	....
4.	வட்டிக் காப்பு விகிதம் = வட்டிக்கும் வரிக்கும் முந்திய இலாபங்கள் ÷ வட்டி	....

விடைகள்

1. சரி
2. பிழை
3. பிழை
4. சரி

38. (அ) உற்பத்தியின் மீது அக்கறை செலுத்துவது .... சார்ந்த தலைமைத்துவம் என்பதுடன் .... மீது அக்கறை செலுத்துவது ஊழியர் சார்ந்த தலைமைத்துவம் எனப்படும்.

(ஆ) வழமையான வேலைகளுக்கு கூடுதலான மேலதிக வேலை மணித்தியாலங்களுக்கான கொடுப்பனவு .... எனவும் உற்பத்தி இலக்கங்களுக்கு மேலதிக உற்பத்திக்கான கொடுப்பனவு .... எனவும் அழைக்கப்படும்.

விடைகள்

(அ) தொழில்சார் / பணிசார் / உற்பத்திசார்
ஊழியர் / மனிதர்

(ஆ) மேலதிக நேரக் கொடுப்பனவு (Over time)
ஊக்குவிப்புகள் (Incentives)

39. (அ) பசுமை உற்பத்தியில் பயன்படுத்தக்கூடிய மூன்று கழிவு முகாமைத்துவ நடைமுறைகளாவன, குறைத்தல் (Reduce) .... மற்றும் .... என்பன ஆகும்.

(அ) பெறுமதி மற்றும் அளவின் அடிப்படையில் வகைப்படுத்துவதன் மூலம் சரக்கிருப்புகளைக் கட்டுப் படுத்துதல் .... முறை எனவும் சரக்கிருப்புக்களைப் பூச்சிய மட்டத்தில் பேணுவதன் மூலம் கட்டுப்படுத்துதல் .... முறை எனவும் அழைக்கப்படும்.

விடைகள்

(அ) மீள் பாவனை (Reuse) மீள்சுழற்சி (Recycle)

(ஆ) ABC
அதே / உரிய நேரத் தந்திரோபாயம் (JIT)

40. (அ) நுகர்வோர் பெறுமதி என்பதன் கருத்து குறித்த உற்பத்திப்பொருள் ஒன்று தொடர்பில் நுகர்வோருடைய உணரப்பட்ட (இனங்காணப்பட்ட) .... உடன் .... இணைத்தல் ஆகும்.

(ஆ) குறைவான .... காரணமாகவும் விரிவான .... கவர்தல் காரணமாகவும் இணையம் மூலமான விற்பனை மேம்படுத்தல் பிரபல்யமடைந்து வருகின்றது.

விடைகள்

(அ) மீள் பாவனை (Reuse) மீள்சுழற்சி (Recycle)

(ஆ) ABC
அதே / உரிய நேரத் தந்திரோபாயம் (JIT)

41 தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குப் **பொருத்தமான விடைகளை** எழுதுக.

41. பின்வரும் நியமங்களுக்குப் பொருத்தமான சான்றுப்படுத்தல் முறைமைகளை (துறைகளை) எழுதுக.

1. ISO 9001: 2015 ....
2. ISO 14001: 2015 ....
3. ISO 22000: 2005 ....
4. ISO 2600 ....

விடைகள்

1. தர முகாமைத்துவ முறைமை (**Quality Management System**)
2. சூழல் முகாமைத்துவ முறை (**Environment Management System**)
3. உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறை (**Food Safety Management System**)
4. சமூக பொறுப்பு மீதான வழிகாட்டல் (**Guidence of Social Responsibility**)

42. இலங்கை சிற்றளவு வணிகங்களக்காக அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற நிதி சாரா ஊக்குவிப்புக்களின் நான்கு வகைகளைக் குறிப்பிடுக.

1. ....
2. ....
3. ....
4. ....

விடைகள்

1. ஆலோசனை வழங்கல் வசதி
2. தொழில்நுட்ப வசதி
3. சந்தைப்படுத்தல் வசதி
4. உட்கட்டமைப்பு

43. இலத்திரனியல் வியாபாரம் நிகழும் நான்கு வழிகளைக் குறிப்பிடுக.

1. ....
2. ....
3. ....
4. ....

விடைகள்

1. வணிகத்திலிருந்து வணிகத்திற்கு (B 2 B)
2. வணிகத்திலிருந்து வாடிக்கையாளருக்கு (B 2 C)
3. வணிகத்திலிருந்து அரசுக்கு (B 2 G)
4. வாடிக்கையாளரிடமிருந்து வாடிக்கையாளருக்கு (C 2 C)
5. வாடிக்கையாளரிடமிருந்து அரசுக்கு (C 2 G)

6. அரசிலிருந்து வாடிக்கையாளருக்கு (G 2 C)
7. அரசிலிருந்து வணிகத்துக்கு (G 2 B) ஏதாவது நான்கு

44. சந்தைத் துண்டமாக்கலின் பயனுறுதித் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான நான்கு தேவைப்பாடுகளை எழுதுக

1. ....
2. ....
3. ....
4. ....

விடைகள்

1. அளவிடக்கூடியதாக இருத்தல்
2. போதுமானதாக இருத்தல்
3. அடையக்கூடியதாக இருத்தல்
4. வேறுபடுத்தி இனங்காணக்கூடியதாக இருத்தல்
5. செயற்படுத்தக் கூடியதாக இருத்தல் ஏதாவது நான்கு

45. வணிகமொன்றுக்குக் கிடைக்கக்கூடிய நான்கு நேர் நிதி மூலங்களைக் குறிப்பிடுக

1. ....
2. ....
3. ....
4. ....

விடைகள்

1. நிறுத்தி வைத்த லாபம்
2. தேய்வு ஏற்பாடுகள்
3. பங்கு வழங்கல்
4. தொகுதிக் கடன் வெளியீடு

46. கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தில் கொடுக்கல்வாங்கல் செய்யப்படும் நான்கு வகையான பிணைகளைப் பெயரிடுக.

1. ....
2. ....
3. ....
4. ....

விடைகள்

1. சாதாரண பங்கு வழங்கல்
2. முன்னுரிமைப் பங்கு வழங்கல்
3. பங்கு ஆணைப்பத்திரம்
4. கூட்டிணைக்கப்பட்ட தொகுதிக் கடன்
5. அரச கடன் பிணைப்பத்திரங்கள் ஏதாவது நான்கு

47. நிறுவனமொன்றின் மனிதனை முகாமைத்துவத்தின் வெற்றிகரமான தன்மையை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தக் கூடிய நான்கு நியதிகளைக் குறிப்பிடுக

1. ....
2. ....
3. ....
4. ....

விடைகள்

1. ஊழியர் புரள்வு
2. ஊழியர் விலகல்
3. ஊழியர் வினைத்திறன்
4. கைத்தொழில் உறவுகள்

48. பின்வரும் வரிப்படங்களினால் எடுத்துக்காட்டப்படும் கணினி வலைப்பின்னல்களைப் பெயரிக

1. ....

2. ....

3. ....

4.  ....

விடைகள்

1. வட்ட / மோதிர வலையமைப்பு (Ring network)
2. நட்சத்திர வலையமைப்பு (Star network)
3. மர வலையமைப்பு (Tree network)
4. பஸ் வலையமைப்பு (Bus network)

49. தரவு செய்முறைப்படுத்தும் தொழிநுட்பத்தை வகைப்படுத்தக்கூடிய **நான்கு** முறைகளை குறிப்பிடுக

1. ....
2. ....
3. ....
4. ....

விடைகள்

1. கையியக்க முறை / கைவினை முறை (Manual)
2. பகுதியளவிலான கையியக்க முறை (Semi Manual)
3. இலத்திரனியல் பொறிமுறை (Electro Mechanical)
4. இலத்திரனியல் தரவு செய்முறைப்படுத்தல் (Electronic data Procesing)

50. வணிகமொன்றுக்கான சாத்தியத்தன்மை பற்றிய கற்கையை மேற்கொள்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய **நான்கு** துறைகளைக் குறிப்பிடுக.

1. ....
2. ....
3. ....
4. ....

விடைகள்

1. சந்தை
2. தொழில்நுட்பம்
3. நிதி
4. சட்டம்
5. சூழல்
6. வளங்கள்
7. சமூக கலாசாரம்

2.1.8 வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பு



வரைபு 06

2.1.9 வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம் :

வினா இலக்கம்	புள்ளிகள் பெற்ற சதவீதம்					
	புள்ளி 0	புள்ளி 0.5	புள்ளி 1	புள்ளிகள் 1.5	புள்ளிகள் 2	துலங்களை வெளிக்காட்டாத
31	9.73%	21.20%	41.40%	22.30%	4.84%	0.53%
32	6.73%	16.07%	26.60%	42.80%	6.97%	0.83%
33	19.57%	26.63%	30.87%	20.20%	1.83%	0.90%
34	38.17%	7.80%	39.73%	7.93%	3.30%	3.07%
35	8.30%	3.33%	31.38%	11.20%	44.82%	0.97%
36	34.81%	10.44%	28.88%	5.97%	17.04%	2.86%
37	1.37%	5.94%	19.67%	31.38%	41.47%	0.17%
38	6.73%	12.77%	17.90%	48.13%	13.04%	1.43%
39	12.87%	13.77%	21.50%	21.47%	28.27%	2.12%
40	20.58%	36.46%	32.19%	5.77%	2.43%	2.57%
41	37.08%	18.11%	20.24%	17.71%	4.60%	2.26%
42	13.37%	19.64%	23.97%	23.57%	18.42%	1.03%
43	35.80%	1.33%	2.43%	9.23%	49.71%	1.50%
44	58.10%	4.37%	6.23%	8.90%	16.73%	5.67%
45	23.13%	17.50%	20.60%	19.43%	17.87%	1.47%
46	16.53%	29.17%	25.93%	20.20%	5.84%	2.33%
47	44.80%	13.70%	12.03%	15.70%	10.00%	3.77%
48	14.00%	4.80%	9.03%	15.23%	55.81%	1.13%
49	68.03%	2.03%	3.47%	9.60%	11.64%	5.23%
50	41.11%	12.80%	13.17%	16.47%	12.53%	3.90%

அட்டவணை 7

* வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிகள் பெற்றுள்ள முறையானது 0 புள்ளி, 0.5 புள்ளி, 01 புள்ளி, 1.5 புள்ளி, 02 புள்ளி எனும் வகையில் நிரல்களில் காட்டப்பட்டுள்ளது.

* துலங்கலைக் காட்டாதவர்கள் எனும் நிரலில் குறித்த வினாக்களுக்கு விடையளிக்காத பரீட்சார்த்திகள் வீதம் காட்டப்பட்டுள்ளது.

  உ-ம் - பரீட்சார்த்திகளுள் 56% மானோர் வினா இலக்கம் 48 இற்கு பூரணமான புள்ளிகளைப் பெற்றுள்ளதுடன் 33, 40 வினாக்களுக்கு அண்ணளவாக 2% ஆகிய மானோர் மாத்திரமே முழுப்புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

2.1.10 வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும் ஆலோசனைகளும் :

31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளிக்கப்பட்ட முறை தொடர்பில் கவனத்தில் கொள்ளும்போது 34, 40, 41, 44, 47, 49 ஆகிய வினாக்களின் இலகுதன்மை 35% சதவீதத்தை விடக்குறைவாகும்.

வினா இலக்கம் 34 (அலகு - முகாமைத்துவம்)

இவ் வினாவிற்கான விடையளித்தல் இலகுதன்மை 31% ஆகும். இங்கு "அ" இல் S&P SL 20 விலைச்சுட்டியில் உள்ளடக்கப்படுவதற்கு கம்பனியொன்று பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் தொடர்பிலான நடைமுறைரீதியான அறிவு மாணவர்களுக்கு இருத்தல் வேண்டும். அதே போன்று இங்கு "ஆ" இல் குத்தகை தொடர்பிலான அறிவு குறைவாக இருந்தமை காரணமாக சரியான விடை அளிக்கப்படவில்லை. எனவே குத்தகை தொடர்பிலான அறிவினை உறுதிப்படுத்தக்கூடியவாறு மாணவர்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது பொருத்தமானதாகும்.

வினா இலக்கம் 40 (அலகு - சந்தைப்படுத்தல் முகாமை)

இவ்வினாவிற்கான விடையளித்தல் இலகுதன்மை 32% ஆகும். சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய உள்ளீடுகள் தொடர்பிலான விளக்கம் தேவையானளவு காணப்படாமையே இவ்வாறு இலகுதன்மை குறைவடைவதற்கான காரணமாகும். ஆகவே சந்தைப்படுத்தலின்போது பயன்படுத்துகின்ற பல்வேறு உள்ளீடுகள் (சொற்கள்) தொடர்பிலான விளக்கத்தை உறுதிப்படுத்தக்கூடியவாறு வகுப்பறையினுள் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் பொருத்தமானது.

வினா இலக்கம் 41 (அலகு - அரசிற்கும் வணிகங்களுக்கும் இடைலான தொடர்பு)

இவ்வினாவிற்கான விடையளித்தல் இலகுதன்மையானது 33% ஆகும். சர்வதேச சந்தைப்படுத்தல் முறைமை தொடர்பிலான நடைமுறைரீதியான அறிவு காணப்படாமையே இவ்வாறு இலகுதன்மை குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கான காரணமாகும். சர்வதேச சந்தைப்படுத்தல் முறைமை தொடர்பிலான இற்றைப்படுத்தப்பட்ட நடைமுறை ரீதியான அறிவைப் பெறக்கூக்கூடிய வகையில் வகுப்பறைச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

வினா இலக்கம் 44 (அலகு - சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்)

இவ்வினாவிற்கு விடையளித்தல் இலகுதன்மையானது 28% ஆகும். வினாவின் உள்ளடக்கத்தினை சரியாக விளங்கிக்கொள்ள முடியாமையே இவ்வாறு இலகுதன்மை குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கான காரணமாகும். வினாவொன்றினை வாசித்து விளங்கிக்கொள்வதற்கான திறன்களை மேம்படுத்தக்கூடியவாறு மாணவர்களை பயிற்சிகளில் ஈடுபடுத்தக்கூடிய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடல் வேண்டும்.

வினா இலக்கம் 47 (அலகு - மனிதவள முகாமைத்துவம்)

இவ்வினாவிற்கான விடையளித்தல் இலகுதன்மை 31% ஆகும். எந்தவிதப் புள்ளியும் பெறாதவர்கள் 45%ஆகும். விடையளிக்கும்போது கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு நிறுவனமொன்றின் மனிதவள முகாமைத்துவத்தின் வெற்றியினை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய நியதிகள் தொடர்பில் சரியான விளக்கம் காணப்படல் வேண்டும். எனவே அதன் நியதிகள் தொடர்பில் விளக்கம் கிடைக்கும் வகையில் வகுப்பறையில் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் மிக முக்கியமானது.

வினா இலக்கம் 49 (அலகு - வணிகத் தகவல் முறைமை)

இவ்வினாவிற்கான விடையளித்தல் இலகுதன்மை 21% ஆகும். எந்தவிதப் புள்ளியும் பெறாதவர்கள் 68% ஆகும். முழுப்புள்ளியையும் பெற்றவர்கள் 12% மாத்திரமேயாகும். தரவுகள் மற்றும் தகவல்கள் தொடர்பிலான தெளிவான விளக்கமின்றி விடையளித்தமை காரணமாகவே இவ்வாறு இலகுதன்மை குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. எனவே வினாவிற்கு விடையளிக்கும்போது அதனைச் சரியாக விளங்கி விடையளித்தல் தொடர்பில் பரீட்சார்த்திகளின் கவனம் செலுத்தச் செய்யவும்.

2.2 வினாத்தாள் II மற்றும் விடையளித்தல் தொடர்பிலான தகவல்கள்

2.2.1 வினாத்தாள் II இன் கட்டமைப்பு

நேரம் 03 மணித்தியாலங்களாகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.
இவ்வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்கள் 4 ஆகும்.
பகுதி II - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்கள் 4 ஆகும்.

* ஒவ்வொரு பிரிவிலிருந்தும் குறைந்தது இரு வினாக்கள் வீதம் தெரிவு செய்து 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

* ஒரு வினாவிற்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

* இரு வினாத்தாள்களுக்கும் இறுதிப் புள்ளியினைக் கணித்தல்

  வினாத்தாள் I இற்கான புள்ளிகள் = 100
  வினாத்தாள் II இற்கான புள்ளிகள = 100
  இறுதிப் புள்ளிகள் = 200 / 2
  = 100

2.2.2 வினாத்தாள் II - இற்கான உத்தேச விடைகள், புள்ளிவழங்கல் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள்

வினாத்தாள் II இல் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்தல் தொடர்பிலான அவதானிப்புக்கள், வரைபடம் 2.3, 4.1, மற்றும் 4.2 இன் உதவியுடன் முன்வைக்கப்பட்டுள்ளது. வினாவிற்குரிய வரைபடப் பகுதியானது ஒவ்வொரு வினாவினதும் அவதானிப்புகள் முடிவுகள் என்பவற்றுடன் காட்டப்பட்டுள்ளது.

வினாத்தாள் II
பகுதி I

1. (i) (அ) வணிகம் ஒன்றின் நோக்கங்கள் நான்கைப் பட்டியலிடுக.

(i) சந்தையில் நீண்டகாலம் நிலைத்திருத்தல்
(ii) விற்பனையை உச்சப்படுத்தல்
(iii) பங்குகளின் பெறுமதியை அதிகரித்தல்
(iv) வளங்கலை அதிகரித்தல்
(v) மனிதவளம்
(vi) ஆய்வும் அபிவிருத்தியும்
(vii) முகாமைத் தகவல் முறைமை

(4 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திப்பொருட்களானவை பொருட்கள் சேவைகளுக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை" உற்பத்திப்பொருட்களாகக் கருத்திற்கொள்ளத்தக்க பொருட்கள் சேவைகள் **அல்லாதன நான்கைப்** பெயரிடுக.

(i) எண்ணம் (ii) ஆதனம் (iii) இடம் (iv) அனுபவம் (v) தனிநபர் / மக்கள்
(vi) தகவல் (vii) நிகழ்வுகள்

(4 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ii) (அ) நுகர்வுப்பொருட்களுக்கான வகைப்படுத்தல் முறைகளுக்குள்ளே "தளபாடங்கள்" மற்றும் "அதிகாரிகளுக்குப்" (Glossary) பொருத்தமான முறைகளைத் தருக.

(i) தளபாடம் - கடைப்பண்டம்
(ii) தளபாட - நாடாப்பண்டம்

(2 விடயங்களுக்கு 1 புள்ளி வீதம் 02 புள்ளி)

(ஆ) மேலே (ii)(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பொருட்களும் நீர் குறிப்பிட்ட வகைப்படுத்தல்

கடைப்பண்டம்	நாடாப்பண்டம்
• தொடர்ந்து கொள்வனவு செய்யப்படுவதில்லை. • அன்றாடப் பாவனைக்குத் தேவையானவை. • விலை, தரம் என்பவற்றை ஒப்பீடு செய்து கொள்வனவு செய்யப்படுபவை. • காலம், நேரம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு கொள்வனவு செய்யப்படுபவை.	• தனித்துவமான விசேட தேவைக்கான பாவனை • எல்லா இடங்களிலும் விற்பனை செய்யப் படுவதில்லை. • மேம்படுத்தல் இல்லை. • அன்றாட தேவைக்குப் பயன்படுத்தப் படுவதில்லை.
2 × 1/2 = 1 புள்ளி	2 × 1/2 = 1 புள்ளி

(iii) (அ) கடந்த சில வருடங்களாக இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாக் கைத் தொழிற்துறை மூலமான பங்களிப்பின் படிப்படியான வளர்ச்சிக்குக் காரணமான **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக.

நாணயமாற்று வீதத்தில் ஏற்பட்டு வரும் தேய்வு

- வெளிநாடுகளுடனான அரசாங்கத்தின் சிறந்த உறவுகள்
- அபிவிருத்தியடைந்து வரும் உட்கட்டமைப்பு வசதிகள்
- சுற்றுலாத் துறை மீதான அதிகரித்த முதலீடு
- அமைதியான சூழ்நிலை
- பிராந்திய பொருளாதார அபிவிருத்தி
- சுற்றுலாத்துறை மீதான பயனுறுதியான நடவடிக்கை

(2 விடயங்களுக்கு 02 புள்ளிகள்)

(ஆ) அரச மற்றும் தனியார் துறைகள் குறிப்பிட்ட சில வணிக நடவடிக்கைகளில் போட்டி மிக்கவையாக ஈடுபடுகின்றபோதும், தனியார் துறையிலும் பார்க்க அரச துறையின் மூலம் தமது தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பொது மக்களை ஊக்குவிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** விடையங்களைக் குறிப்பிடுக.

- நம்பிக்கை / மனவுறுதி
- விசுவாசம்
- விலை குறைவு என்ற நம்பிக்கை
- ஏமாற்ற மாட்டார்கள் என்ற நம்பிக்கை
- தரமான அனுபவம்மிக்க ஊழியர்கள்
- நிறுவன கலாசாரம்
- வாடிக்கையாளரின் பழக்கங்கள்

குறிப்பிட $2 \times 1/2 = 1$ புள்ளி
விளக்க $2 \times 1/2 = 1$ புள்ளி

(iv) இலங்கையின் முதியோர் சனத்தொகை அதிகரிப்பதன் மூலம் வாய்ப்பைப் பெறும் கைத்தொழில் ஒன்றையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கக்கூடிய கைத்தொழில் ஒன்றையும் பெயரிட்டு, அதற்கான காரணங்களைத் தருக.

வாய்ப்புக்களை பெறக்கூடிய கைத்தொழில்கள்	மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்
• சுகாதார மற்றும் வைத்திய சேவைகள் • முதியோர் சேவைகள் • பொழுதுபோக்குச் சேவைகள் • உளவியல் சார்ந்த சேவைகள்	• மருந்தகம், தாதியர் சேவை • Home for the age • வழிபாட்டுத் தலங்களுக்கான சுற்றுலா • தியானம், மன அமைதி நடவடிக்கைகள்

அச்சுறுத்தலை எதிர்நோக்கும் கைத்தொழில்கள்	ஏற்படும் தாக்கம்
• காப்புறுதித் துறை • கல்வித்துறை • தகவல் தொடர்பாடல் துறை	• ஆயுட்காப்புறுதி செய்வோர் குறைவடைதல் • கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் குறைவடைதல். • அனுபவமின்மை ஏற்படல்.

விளக்கத்திற்கு 1 புள்ளி

காரணங்களுக்கு 1 புள்ளி

(இது போன்ற வாய்ப்புக்களும் அச்சுறுத்தல்களும் அடங்கலான விடைகளுக்கு புள்ளி வழங்கவும்.)

(v) ஒரு குறித்த கைத்தொழிலின் அதிகரித்த போட்டியானது அதே கைத்தொழிலில் ஈடுபடும் வணிக நிறுவனம் ஒன்றினது உற்பத்திப்பொருள் மற்றும் விலைத் தீர்மானங்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** முறைகள் வீதம் விளக்குக.

உற்பத்திப்பொருள்	விலை
• உயர்ந்த தரத்தின் மூலம் • புத்தாக்கத்தின் மூலம் • மேலதிக நலன்களை வழங்குவதன் மூலம் • மேலதிக சிறப்பம்சங்களைச் சேர்த்தல் மூலம் • தொடர்ச்சியான முன்னேற்றங்கள் ஏற்படச் செய்வதன் மூலம் • உரிய நியமத்தை உருவாக்குவதன் மூலம்	• விலை மாற்றத்தின் மூலம் • கழிவு விடுதொகைகளை வழங்குவதன் மூலம் • இலகுக் கொடுப்பனவு முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம்.
குறிப்பிட 2 × 1/2 = 1 புள்ளி **விளக்க 2 × 1/2 = 1 புள்ளி**	**குறிப்பிட 2 × 1/2 = 1 புள்ளி** **விளக்க 2 × 1/2 = 1 புள்ளி**

1 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :

1ஆம் வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்



வினாத்தாள் II இல் பகுதி I இல் கூடுதலான மாணவர் தொகையினர் தெரிவு செய்த வினா இதுவாகும். இதனை 100% மாணோர் தெரிவு செய்திருந்தனர். (வரைபடம் 02) இவ்வினாவிற்கான புள்ளிகள் 20 ஆகும்.

இதில் புள்ளிகள் 00 - 05 வகுப்பாயிடையில் 13% உம்
புள்ளிகள் 06 - 10 வகுப்பாயிடையில 33% உம்
புள்ளிகள் 11 - 15 வகுப்பாயிடையில் 40% உம்
புள்ளிகள் 16 - 20 வகுப்பாயிடையில 14% உம்

என புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இவ்வினாவிற்கு 11 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் 54% ஆவர்.

1ஆம் வினாவின் பிரிவுகள் மற்றும் உபபிரிவுகளுக்கான இலகுதன்மை



1ஆம் வினாவின் பிரிவுகளும் உபபிரிவுகளும்

இவ்வினாவிற்குரிய பிரிவுகள் மற்றும் உபபிரிவுகள் 8 இல் இலகுதன்மை கூடிய உபபிரிவு (i) (அ) என்பதுடன் அதன் இலகுதன்மை 80% ஆகும். அதே போன்று இலகுதன்மை குறைந்த உபபிரிவு (ii) (ஆ) என்பதுடன் அதன் இலகுதன்மை 39% ஆகும். ஏனைய பிரிவு, உபபிரிவுகளின் இலகுதன்மை தொடர்பில் இவ் வரைபின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

முதலாம் வினாவின் (ii) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 39% ஆகும். இவ்வாறு இலகுதன்மை வீழ்ச்சியடைவதற்குக் காரணம் நுகர்வுப் பண்டங்களின் வகைப்படுத்தல்களை ஞாபகத்தில் வைத்திருந்து குறிப்பிட்டாலும் அவை தொடர்பில் சரியான விளக்கமின்மை காரணமாக அவற்றை வகைப்படுத்தவோ அதற்கான காரணங்களை எழுதவோ பரீட்சார்த்திகளுக்கு முடியாமல் போயுள்ளது. நுகர்வுப் பண்டங்களின் வகைப்படுத்தல்களின்போது கவனத்தில் கொள்ளப்படுகின்ற காரணிகளையும் அவற்றின் பண்புகள் தொடர்பில் உதாரணங்களையும் முன்வைத்து சிறப்பாக வெளிப்படும் வகையில் கற்றல் - கற்பித்தற் செயன்முறைகளை ஒழுங்குபடுத்துதல் பொருத்தமானதாகும்.

முதலாம் வினாவின் (v) ஆவது பிரிவின் இலகுதன்மை 45% ஆகும். இந்த மட்டத்திற்கான காரணம் வினாவின் உள்ளடக்கத்தைச் சரியாக விளஙகிக்கொள்ளாமல் விடையளித்தமையேயாகும். வணிகங்களுக்கிடையே போட்டித்தன்மை அதிகரித்துள்ளமை காரணமாக அவ்வகை வணிகங்களால் தமது உற்பத்திகளின் விலை தொடர்பில் எடுக்கவேண்டிய தீர்மானங்களில் இவை தாக்கம் ஏற்படுத்துகின்ற முறையினை வெவ்வேறாகத் தெளிவுபடுத்தும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளல் பொருத்தமானதாகும்.

2 ஆம் வினா

2. (i) (அ) வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்கு அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய **நான்கு** தந்திரோபாயங்களைத் தருக.

- ஒழுங்கு விதிகளில் தளர்வை ஏற்படுத்துதல்
- நாணயமாற்றுவீதக் கொள்கைகளில் தளர்வை ஏற்படுத்துதல்
- உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்
- சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்குதல்
- வரி விடுதலை வசதி மற்றும் ஊக்குவிப்புக்களைப் பயன்படுத்தல்
- வெளிநாட்டு முதலீட்டு அபிவிருத்திக்கான வசதிகளை ஏற்படுத்தல்
- சர்வதேச கொள்கைகள் ஊடாக சர்வதேச தொடர்புகளை உறுதிப்படுத்தல்

(4 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) "நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் அரசாங்கத்தின் நோக்கமாகும்." குடிநீரைப் போத்தலில் அடைக்கும் உற்பத்தியில் ஈடுபடும் ஒருவராக உம்மைக் கருதிக்கொண்டு வணிகர் என்ற வகையில் மேற்கூறிய நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு உம்மால் பங்களிப்புச் செய்யக்கூடிய **இரண்டு** வழிகளைச் சுருக்கமாக விளக்குக.

- குடிநீர் போத்தல் தொடர்பான தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதலும் அதனைப் பின்பற்றுதலும்
- போலியான போத்தல்களை உற்பத்தி செய்ய முடியாதவாறு போத்தல்களை வடிவமைத்தல்
- சில்லறை வியாபாரி, விநியோகஸ்தர்கள் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான முறையான அறிவுறுத்தல்களை வழங்குதல்
- தேவையான நீரைப் பெற்றுக்கொள்ளும் மூலங்களின் சுற்றுப்புறங்களைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்துக் கொள்ளல்
- நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பில் நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்

(2 விடயங்களுக்கு 02 புள்ளிகள்)

(ii) (அ) வருமானவரி மற்றும் பெறுமதிசேர் வரி (**VAT**) ஆகியவற்றை ஒப்பிடுவதன் மூலம் அவற்றுக்கிடையிலான **இரண்டு** வேறுபாடுகளை எழுதுக.

வருமான வரி	VAT
• நேர் வரி • வருமானத்தின் மீது விதிக்கப்படும். • வருமானம் அதிகரிக்க அதிகரிக்க வரி வீதம் அதிகரிக்கும் (விருத்தி முறை) • வருமான வரிக்கு சில செலவுகள் உட்படாது.	• நேரில் வரி • பொருட்கள் சேவைகளின் மீது விதிக்கப்படும். • நிலையானது. • மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

(2 வேறுபாடுகளுக்கு 02 புள்ளிகள்)

(ஆ) வங்கிக்கடன் வட்டிவீத அதிகரிப்பானது மெய் ஆதனச் சொத்து (real estate) வணிகத்தில் ஈடுபட்டுள்ள வணிகர் ஒருவர் மீது தாக்கம் செலுத்தக்கூடிய **இரண்டு** வழிகளைக் குறிப்பிடுக.

- மெய் ஆதன சொத்துக்களின் விற்பனை குறைவடையும்.
- மூலதனச் செலவு அதிகரிக்கும்.
- வணிகத்தின் செயற்பாட்டுச் செலவு அதிகரிக்கும்

(2 × 1 = 2 புள்ளிகள்)

(iii) (அ) "பொதுத்துறை வணிகங்களில், பொதுக்கூட்டுத்தாபனங்களிலும் பார்க்க அரசாங்கத்திற்குச் சொந்தமான பொதுக்கம்பனிகள் வணிகப் போட்டிக்கு முகங்கொடுப்பதற்கு மிகவும் பொருத்தமானவையாகும்." இக்கூற்றை நியாயப்படுத்துவதற்கு **இரண்டு** விடயங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

- நிதியியல் சுதந்திரம்
- சுதந்திரமான தீர்மானம் எடுத்தல்
- அரச நிதி சட்ட விதிமுறைகள், நிர்வாக சட்ட விதிமுறைகளுக்கு அப்பாற் செயற்பட முடிதல்
- ஊழியர் நலன்களைத் தீர்மானிக்க முடிதல்
- அரசியல் செல்வாக்கு குறைவு

பெயர் குறிப்பிட 2 × 1 = 2 புள்ளிகள்

விளக்க 2 × 1 = 2 புள்ளிகள்

(iv) (அ) இலங்கையின் "கூட்டுறவு இயக்கமுறையில்", அது செயற்படும் தன்மையின் அடிப்படையில் இனங்காணக்கூடிய **இரண்டு** பிரச்சினைகளைத் தருக.

முகாமைத்துவப் பலவீனம்

- சுயாதீனம் குறைவடைதலும் அரசியல் தலையீடு அதிகரித்தலும்
- குறைந்த தகைமை உடைய நிர்வாகிகளால் நிர்வகிக்கப்படுவதால் முகாமையில் பலவீனம் காணப்படல்
- அங்கத்துவம் குறைவடைதல்
- நிதி நிலைமையை உயர்த்துவதற்கான சாத்தியம் குறைவடைதல்
- பணித்துறை ஆட்சி

(2 X 1 = 2 புள்ளிகள்)

(ஆ) அங்கீகாரம் பெறுபவரைத் தெரிவுசெய்யும்போது அங்கீகாரம் வழங்குபவரால் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய **நான்கு** விடயங்களை எழுதுக.

- அங்கீகாரம் பெறுபவரின் நம்பகத்தன்மை
- அங்கீகாரம் பெறுபவரின் நிதி உறுதித்தன்மையும் ஏனைய பலங்களும்
- அங்கீகாரம் பெறுபவரின் அனுபவம், அறிவு
- அங்கீகாரம் பெறுபவரின் நன்மதிப்பும் பிரதிமையும் **(4 X 1/2 = 2 புள்ளிகள்)**

(v) சனந்தன் மற்றும் பியந்தன் ஆகியோர் தலா ரூ. 100000 ஐ முதலீடு செய்வதன் மூலம் எழுத்து வடிவிலான உடன்படிக்கை எதுவுமின்றி மருந்துப் பொருட்களை விற்பனை செய்வதற்கான பங்குடமை வியாபாரமொன்றை "ஓலு அன்ட் கம்பனி" எனும் பெயரில் ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றனர். தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பங்குடைமையுடன் மையுடன் தொடர்புடைய அடிப்படைச் சட்ட விதிகள் **நான்கைக்** குறிப்பிட்டு, அவை எவ்வாறு பொருத்தமானவை என்பதனைச் சுருக்கமாக விவரிக்குக.

- 1890 ஆம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டம் - எழுத்தில் உடன்படிக்கைகள் இல்லாமை
- 1840 ஆம் ஆண்டு மோசடிகள் தவிர்ப்புக் கட்டளைச் சட்டம். ரூ - 1000/= இற்கு மேல் உள்ள மூலதனத்திற்கு எழுத்துமூல உடன்படிக்கை அவசியம்.
- 1918ம் ஆண்டின் 7 ஆம் இலக்க வியாபார பெயர் பதிவுக் கட்டளைச்சட்டம். பங்காளர் பெயர்களுக்கு பதிலாக வேறு பெயரிட்டால் பதிவு அவசியம்.
- 2015 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க தேசிய ஔடத ஒழுங்கமைத்தல் அதிகாரசபை சட்டமும். 1980 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க அழகு சாதனப் பொருட்கள் அபாயகரமான மருந்துப் பொருட்கள் கட்டளைச் சட்டமும் - இது மருந்தகம் என்பதால் **பெயரிட 4 × 1/2 = 2 புள்ளிகள்**

விளக்க 2 × 1 = 2 புள்ளிகள்

2 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :



2ம் வினாவினைத் தெரிவு செய்துள்ள பிரிவினர் 76% ஆகும். (வரை படம் 02) இவ்வினாவிற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும்.

அதில் 00 - 05 புள்ளிகள் வகுப்பாயிடையில் 20% உம்
06 - 10 புள்ளிகள் வகுப்பாயிடையில் 43% உம்
11 - 15 புள்ளிகள் வகுப்பாயிடையில் 29% உம்
16 - 20 புள்ளிகள் வகுப்பாயிடையில் 08% உம்

என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர் இவ்வினாவிற்கு 11 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் 37% ஆவர்.



இவ்வினாவிற்குரிய 08 பிரிவுகள், உப பிரிவுகளில் இலகுதன்மை கூடிய உபபிரிவு i (ஆ) என்பதுடன் அதன் இலகுதன்மை 78% ஆகும். அதே போன்று இலகுதன்மை குறைந்த பிரிவு (iii) என்பதுடன் அதன் இலகுதன்மை 20% ஆகும். ஏனைய பிரிவு, உபபிரிவுகளின் இலகுதன்மை தொடர்பில் இவ்வரைபின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

இரண்டாவது வினாவின் (iii) ஆம் பிரிவின் இலகுதன்மை 20% ஆகும். அரச கூட்டுத்தாபனங்களை விட அரச கம்பனிகள் வணிகப் போட்டிக்கு முகம் கொடுப்பதற்கு பொருத்தமானவை என்பதனை தேவையானளவு காரணிகளை முன்வைத்து உறுதிப்படுத்துவதற்கு பரீட்சார்த்திகள் தவறியமை இவ்வாறு இலகுதன்மை குறைவடைந்தமைக்குக் காரணமாகும். அரச கூட்டுத்தாபனங்கள், அரச கம்பனிகளுக்கிடையில் காணப்படுகின்ற ஒற்றுமைகள், வேற்றுமைகள் தொடர்பில் மாணவர்கள் சிறந்த அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு தகவல் மூலங்களைப் (உ+ம் :- இணைய வலையமைப்பு) பயன்படுத்துவதற்கு அவர்களை ஊக்குவித்தல் பொருத்தமானதாகும். அதேபோன்று விடையளிக்கும்போது வினாவிற்கு ஏற்றவாறு காரணங்களை முன்வைப்பதற்கும் மாணவர்களைப் பழக்குதல் வேண்டும்.

இரண்டாம் வினாவின் (iv) (அ) உப பிரிவில் இலகுதன்மை 39% ஆகும். இவ்வாறு இலகுதன்மை குறைவடைவதற்கான காரணம் கூட்டுறவு மற்றும் கூட்டுறவு வணிகம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை உறுதியாக இனங்காணாமையேயாகும். நூற்றாண்டுகளுக்கும் மேல் பழமையான வணிக அமைப்பாகிய கூட்டுறவு விருத்தியடையாமைக்குக் காரணமாயமைந்துள்ள விடயங்கள் தொடர்பில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது தேடியறிந்து கொள்வதற்கான மாணவர்களுக்கு அறிவினை வழங்குதல் பொருத்தமானது.

இரண்டாம் வினாவின் (v) ஆவது பிரிவின் இலகுதன்மை 35%ஆகும். பங்குடமை வணிகங்களில் தாக்கம் செலுத்தும் சட்டத்தினை இலக்கங்களுடன் கூடியதாக முன்வைப்பதற்கு மாணவர்களிடம் சரியான விளக்கம் காணப்படாமையே இவ்வாறு இலகுதன்மை குறைவடையக் காரணமாகும். பாட அலகுடன் தொடர்புடைய கட்டளைச் சட்டங்களைக் குறிப்பிடும்போது குறிப்பிட்ட சட்டத்தின் பெயர், வருடம், இலக்கம் என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடுவதற்கு மாணவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவது மிகப் பொருத்தமானதாகும்.

3 ஆம் வினா

3. **(i)** ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு வணிகர்களிலும் பார்க்க முயற்சியாளர்களே ஜீவாதாரமானவர்கள் ஆவர். முயற்சியாளரையும் வணிகரையும் ஒப்பிடுவதன் மூலம் இக்கூற்றை விளக்குக.

வணிகர்	**முயற்சியாளர்**
1. மரபுரீதியானர். 2. தற்போதைய அடைவு மட்டங்களில் திருப்தி அடைபவர். 3. இடர்களைத் தவிர்ப்பவர். 4. மரபுரீதியான தீர்மானங்களை எடுப்பவர். 5. குறுங்கால இலக்குடையவர். 6. போட்டியை எதிர்கொள்ள விரும்பாதவர். 7. தற்போதைய அறிவைக் கொண்டு செயற்படுபவர்.	1. மாற்றங்களை வேண்டி நிற்பவர். (Change Oriented) 2. புத்தாக்கங்களையும் வாய்ப்புக்களையும் எதிர்பார்ப்பவர். 3. இடர்களை எதிர்நோக்குபவர். 4. ஆக்கப்பூர்வமான தீர்மானம் எடுப்பவர். 5. நீண்டகால இலக்குடையவர். 6. போட்டியை எதிர்கொள்ள விரும்புபவர்.

- ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு வணிகரை விட முயற்சியாளரே அவசியமானவர். ஏனெனில் தற்போதைய வணிகச் சூழலானது மாற்றமுறுவதாகவும் உயர்ந்த போட்டி மிக்கதாகவும் பூகோள மையப்படுத்தப்பட்டதாகவும் காணப்படுவதனால் முயற்சியாளர் அவசியமாகும்.

வேறுபாடுகள் 3 × 1 = 3 புள்ளிகள்
முடிவு 1 புள்ளி

(ii) அமலா என்பவர் சிறுபராயத்தில் இருந்தே ஒரு முயற்சியாளராக வரும் எண்ணத்தைக் கொண்டிருந்தார். எனினும் அவர் நிதிரீதியான வசதியைக் கொண்டிருக்காமையினால் ஓரளவு பெறுமதிவாய்ந்த கற்களைப் பயன்படுத்தி அலங்கார உற்பத்தி செய்வதற்காக வரையறுத்த மூலதனத்துடன் வணிகமொன்றை ஆரம்பித்தார். அது தற்போது சிறப்பாக முன்னேறிச் செல்கின்றது. இச்சம்பவத்தில் குறிப்பிட்டுள்ள முயற்சியாண்மைசார் பண்புகள் இரண்டைக் காரணங்களுடன் விவரிக்குக.

1. திடசங்கற்பம் - சிறுவயதில் இருந்து முயற்சியாளராக வேண்டும் எனும் எண்ணம்
2. ஆக்கத்திறன் - நவீன சிந்தனை
3. தன்னம்பிக்கை - வியாபாரம் மேற்கொள்வது தொடர்பான தன்னம்பிக்கை
4. அர்ப்பணிப்பு - வியாபாரத்தில் வெற்றியை அடைதல்.
5. வாய்ப்புக்களை இனம் காணலும் செயற்படுத்தலும் - உள்ளுர் வளங்களைப் பயன்படுத்துதல்.
6. தொடர்ந்து நடாத்திச் செல்லல் - வெற்றியை அடைதல்.
7. ஆரம்பிக்கும் திறன் - வணிகத்தை ஆரம்பித்தல்.

(பண்புகள் 2 புள்ளிகள்)

(விளக்க 2 புள்ளிகள்)

(iii) (அ) காசோலையைக் குறுக்குக் கோடிடுவதன் மூலம் வரையுனர் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் **இரண்டு** நோக்கங்களைக் குறிப்பிடுக.

1. பாதுகாப்பு / கருமபீடத்தில் இருந்து பணத்தை மீளப்பெற முடியாமல் செய்தல்
2. காசோலைக்கு பணம் பெற்றுக் கொண்ட நபரை இனங்கண்டு கொள்ள முடிதல்
3. பெறுவோன் கணக்கு மட்டும் என குறுக்குக் கோடிடப்பட்ட காசோலையை சாட்டுதல் செய்தல்
4. வரையறுக்க முடிதல்
5. சாட்சியாகப் பேண முடிதல்

(2 × 1= 2 புள்ளிகள்)

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் இடையே காணப்படும் இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

EPF	ETF
• தொழில் தருனர் தொழில் பெறுனர் பங்களிப்பு • வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறுபவரும் சுயதொழிலில் ஈடுபடுபவரும் அங்கம் பெற முடியாது. • இலங்கை மத்திய வங்கியால் நிர்வகிக்கப்படும். • ஓய்வு வயதை அடைந்த பின்னர் / பெண்கள் திருமணத்தின் பின் 6 மாதங்களுக்குள் / குடிய இயல்பு / அரச நியமனம் காரணமாக இதனை மீளப் பெற்பெற்றுக்கொள்ளலாம். • வட்டியைத் தவிர மேலதிக நலன்களைப் பெற முடியாது.	• தொழில் பெறுனர் பங்களிப்பு மட்டும். • வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெறுவோரும் சுயதொழிலில் ஈடுபடுவோரும் அங்கத்துவம் பெறலாம். • தொழில் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும். • பதவி விலகும் போது பணத்தை மீளப் பெறலாம். • மேலதிக நலன்களைப் பெறலாம்.

(இரு வேறுபாடுகளுக்கு 02 புள்ளிகள்)

(iv) இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையின்படி (2016), நாட்டின் மொத்த சனத்தொகையில் சுமார் 6% சதவீதத்தினர் கடன் அட்டைகளைப் பயன்படுத்துகின்றனர்.

(அ) இலங்கையின் கடனட்டைகளின் பாவனை குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கான **இரண்டு** காரணங்களைத் தருக.

1. கடனாளியாவதில் உள்ள தயக்கம்
2. கொடுக்கல் வாங்கலில் நம்பிக்கையின்மை
3. பாவனை தொடர்பான விழிப்புணர்வு இன்மை
4. நாடளாவியரீதியில் உள்ள கொடுக்கல், வாங்கல் தொடர்பான வரையறுக்கப்பட்ட வசதிகள்.
5. கடனட்டை பெறக்கூடிய தகைமையுடையோர் குறைவு (வங்கிகளின் நியதிகளுக்கு ஏற்ப)
6. உயர்வான வட்டி வீதம்

(2 × 1= 2 புள்ளிகள்)

(ஆ) கடனட்டைப் பாவனையை அதிகரிக்கச் செய்வதற்கு வங்கியாளர்கள் பின்பற்றக்கூடிய **நான்கு** தந்திரோபாயங்களைத் தருக.

1. வாடிக்கையாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்படுத்துதல்.
2. நிறுவனங்களுக்கிடையே தொடர் வலையமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
3. கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
4. மோசடிகளைக் கட்டுப்படுத்த பாதுகாப்பான அட்டை வசதிகளை வழங்குதல்.
5. வேறுபட்ட வாடிக்கையாளர் துண்டங்களை ஏற்படுத்தல்.

(4 × 1/2 = 2 புள்ளிகள்)

(v) (அ) ஒரு நாட்டின் நாணயமாற்றுக் கொள்கைத் தளர்வானது வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அந்நாட்டு வணிகங்களில் தாக்கம் செலுத்தக்கூடிய **இரண்டு** வழிகளை எழுதுக.

1. நாணயப் பரிமாற்று நடவடிக்கைகள் இலகுவாக அமைதல்
2. வெளிநாட்டு வியாபாரம் இலகுவாக மேற்கொள்ளப்படும்.
3. வெளிநாட்டு வியாபாரப் பங்காளர்களுடன் இலகுவாக ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடிதல்
4. புதிய முதலீட்டாளர் வருகையால் வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட வணிகர்களுக்கிடையே போட்டி அதிகரித்தல்

(2 x 1 = 2 புள்ளிகள்)

(ஆ) வணிக வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் மீதான இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையானது வாடிக்கையாளர் மீது அனுகூலமான தாக்கத்தைச் செலுத்தும் **இரண்டு** வழிகளை விளக்குக.

1. பாதுகாப்பான வைப்புக்கள்
2. வைப்புக்கள் மீதான உறுதிப்படுத்தப்பட்ட வருவாய்
3. நலன்கள் அனுபவிக்கலாம் என்ற விசுவாசம் அதிகம்
4. அதிக சேமிப்பு மற்றும் முதலீட்டு வாய்ப்புகளுக்கான கிடைப்பனவு

(2 x 1 = 2 புள்ளிகள்)

3 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :

3 ஆம் வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்



3ஆம் வினாவினைத் தெரிவு செய்துள்ள பிரிவினர் 80% ஆகும் (வரை படம் 02) இவ்வினாவிற்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளிகள் வகுப்பாயிடையில் 11% உம்
06 - 10 புள்ளிகள் வகுப்பாயிடையில் 37% உம்
11 - 15 புள்ளிகள் வகுப்பாயிடையில் 41% உம்
16 - 20 புள்ளிகள் வகுப்பாயிடையில் 11% உம்

என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 11 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் 52% ஆவர்.



இவ் வினாவிற்குரிய பிரிவுகள் மற்றும் உப பிரிவுகள் 08 இல் இலகுதன்மை கூடிய பகுதி 4(அ) என்பதுடன் அதன் இலகுதன்மை 81% ஆகும். அதேபோன்று இலகுதன்மை குறைவான பிரிவு (iii) (ஆ) என்பதுடன் அதன் இலகுதன்மை 28% ஆகும். ஏனைய பிரிவுகளின் இலகுதன்மை இவ்வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

3ஆவது வினாவின் (iii) (ஆ) உப பிரிவின் இலகுதன்மை 28% ஆகும். ஊழியர் சேமலாபநிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) என்பவற்றுக்கிடையில் காணப்படுகின்ற அடிப்படை வேறுபாடுகள் தொடர்பில் பரீட்சார்த்திகளுக்கு போதிய விளக்கம் காணப்படாமையே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். எனவே இந்நிதிகளுடன் தொடர்புடைய பண்புகள் தொடர்பில் கற்றல் கற்பித்தல் செயன்முறையின்போது கவனம் செலுத்துதல் மிகமுக்கியமானதாகும்.

அதே போன்று (v) (அ) உப பிரிவின் இலகுதன்மை 31% ஆகும். வணிக வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களில் இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வை தொடர்பில் சாதகமான முறையில் பரீட்சார்த்திகள் அறிவினைப் பெற்றிருக்காமையே இவ்வாறு இலகுதன்மை குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்குக் காரணமாகும். எனவே மத்திய வங்கியின் மேற்பார்வைச் செயற்பாடுகள் எவ்வாறு வாடிக்கையாளருக்கு சாதகமாக அமைகின்றன என்பதை உறுதிப்படுத்தக்கூடியவாறு மாணவர்களைப் பயிற்சிகளில் ஈடுபடுத்துதல் மிகப் பொருத்தமானதாகும்.

4 ஆம் வினா

4. (i) (அ) பியசீலி என்பவர் தனது சுவீகாரக் குழந்தையான வசந்தனுக்கு ஆயுளுறுதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொண்டார். குழந்தைப் பருவத்திலிருந்தே காணப்பட்ட ஒரு நோயின் காரணமாக வசந்தன் 26 வயதில் இறந்தான். காப்புறுதித் தத்துவங்களின் அடிப்படையில், வசந்தனின் ஆயுளுறுதிப் பத்திரம் தொடர்பில் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்வதில் பியசீலி எதிர்நோக்கக்கூடிய இரண்டு பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக

காப்புறுதி செய்யும் உரிமை
குழந்தை மீதான சட்டரீதியான உரிமையை நிரூபித்தல்

மிக்குயர் நம்பிக்கைத் தத்துவம்
காப்புறுதி ஒப்பந்தம் செய்யும்போது சகல உண்மைத் தகவல்களையும் வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

குறிப்பிட 2 x 1/2 = 1 புள்ளி
விளக்க 2 x 1/2 = 1 புள்ளி

(ஆ) "பொது மக்கள் பொறுப்புக் காப்புறுதி" என்றால் என்ன என்பதனை விபரித்து, அதற்கு உதாரணமொன்று தருக.

வணிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் (நுகர்வோருக்கும்) நுகர்வுப் பொருட்களால் ஏற்படக்கூடிய சேதங்களுக்காக இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக செய்யப்படும் காப்புறுதி ஒப்பந்தம்.

உதாரணம்
உணவு குடிபானங்களை போத்தல்களில் அடைத்து விற்பனை செய்வதால் அவை விஷமடைவதன் காரணமாக நுகர்வோருக்கு ஏற்படும் இழப்புக்கள்.

விளக்கத்திற்கு - 1 புள்ளி
உதாரணம் - 1 புள்ளி

(ii) (அ) தொடர்பாடல் ஊடகம் ஒன்றைத் தெரிவு செய்யும்போது நிறுவனமொன்றினால் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

(1) செலவு (Cost)
(2) பொருந்தும் தன்மை
(3) பெறுநர்
(4) கிடைப்பனவு (Availability)
(5) செயற்படும் எல்லை (Coverage)
(6) போட்டியாளர்களின் ஊடகம் (Competitors Media)
(7) பயன்படுத்துவதற்கான இலகுதன்மை

(4 x 1/2= 2 புள்ளிகள்)

(ஆ) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையைப் (Global Positioning System - GPS) பயன்படுத்துவதன் மூலம் பொருட்களுக்கான போக்குவரத்தின்போது வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டு** தருக.

(1) குறுகிய தூரப் பாதையை அறியக்கூடிய ஆற்றல் (Way)
(2) தூரத்தை அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் (Distanee)
(3) கிரயத்தைத் தீர்மானிக்கக்கூடிய ஆற்றல் (Cost)
(4) குறிப்பிட்ட இடத்தை அடையாளம் காணக்கூடிய ஆற்றல் (Location)
(5) வாகனம் எவ்விடத்தில் நிற்கின்றது என்பதை நிறுவனம் அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல்

(2 × 1 = 2 புள்ளிகள்)

(iii) சில்லறை வணிகத் துறையில் சிறப்புச் சந்தைகள் மிகவும் பிரசித்திபெற்று விளங்குகின்ற போதிலும் இன்னும் மரபுரீதியான சில்லறைக் கடைகளும் பரவலாகக் காணப்படுகின்றமையில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள் **நான்கைக்** குறிப்பிடுக.

(1) கடனுக்குப் பொருட்களை வாங்க முடிதல்
(2) வாடிக்கையாளர்களுக்குக் கிட்டிய இடத்தில் நிறுவனம் காணப்படல்
(3) சிறு அளவுகளில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்
(4) தேவையான நேரத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்
(5) விலை பேரம் பேசல் காணப்படும்
(6) புதிய தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுதல்

(7) வாடிக்கையாளர் உறவு அதிகம்
(8) வாடிக்கையாளர் நம்பிக்கை
(9) உள்ளூர் பொருட்களைக் கொள்ளவனவு செய்யலாம்.
(10) புதிய சந்தைப்படுத்தல், மேம்படுத்தல் கருவிகளை பயன்படுத்த முடிதல்

(4 x 1 = 4 புள்ளிகள்)

(iv) (அ) "பொருட்களை விநியோகிக்கும் செயன்முறையில் மொத்த வியாபாரிகள் முக்கியமானதொரு தரப்பினர் ஆவர்" இக்கருத்துச் சார்பாகவும் எதிராகவும் ஒவ்வொன்றுக்கும் **இரண்டு** காரணங்கள் வீதம் குறிப்பிடுக.

சார்பாக	எதிராக
1 பொருட்களை விநியோகிப்பது இலகுவாக அமைதல் 2 சந்தைத் தகவல்களை உரிய தரப்பினருக்கு இலகுவாக பெற்றுக் கொள்ள முடிதல் 3 உற்பத்திக் கருமங்களில் கவனம் செலுத்த முடிதல் 4 சில்லறை வியாபாரிகளுக்கு தொழிற்படு மூலதன தேவைப்பாடு குறைவடைதல் 5 களஞ்சியப்படுத்தல் இலகு	1 சந்தையில் பொருட்களுக்குத் தேவையற்ற வகையில் தட்டுப்பாடு ஏற்படக்கூடியதாக இருத்தல். 2 பொருட்களின் விலை மட்டம் உயர்வடையக் கூடியதாக இருத்தல் 3 சிலவேளைகளில் பொருட்களுக்கான தரம் குறைவடையும் 4 நிபந்தனைகள் விதி

(2 x 1/2 = 1 புள்ளி) **(2 x 1/2 = 1 புள்ளி)**

(ஆ) "முன்னுரிமைக்கான பொதுமைப்படுத்தப்பட்ட முறைமை +" (Generalized System of Preference - GPS+) என்பதனால் கருதப்படுவது யாது?

அபிவிருத்தியடைந்த நாடுகளால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகள் இதற்காக அபிவிருத்தி அடைந்த நாடுகளால் விதிக்கப்படும் சில நிபந்தனைகளை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

(முழுமையான விடைக்கு 02 புள்ளிகள்)

(v) (அ) இலத்திரனியல் வியாபாரம் நிகழ்வதில் காணப்படும் படிமுறைகளைப் பட்டியலிடுக.

(1) வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கமைத்துக் கொள்ளல்.
(2) பொருள் கொள்வனவு விற்பனை இடம்பெறல்
(3) கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படல்

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) இலத்திரனியல் வணிகத்துக்கும் (e- business) இலத்திரனியல் வர்த்தகத்துக்கும் (e- commerce) இடையிலான **இரண்டு** வேறுபாடுகளை எழுதுக.

இலத்திரனியல் வணிகம்	இலத்திரனியல் வர்த்தகம்
1. பரந்த செயற்பாடு 2. வணிகச் செயற்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கியது. 3. அகரீதியாக முன்னிலைப்படுத்தப்பட்டது.	1. குறுகிய செயற்பாடு 2. கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகளை மட்டும் உள்ளக்கியது. 3. புறரீதியாக முன்னிலைப்படுத்தப்பட்டது.

(இருவேறுபாடுகளுக்கு 02 புள்ளிகள்)

4 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :



4ஆவது வினாவினைத் தெரிவு செய்துள்ள பிரிவினர் 49% ஆகும். இவ்வினாவிற்குரிய புள்ளிகள் 20 ஆகும். வினாப்பத்திரம் II இல் 4வது வினாவினையே குறைந்த வீதத்தினர் தெரிவு செய்துள்ளனர்.

இதில் 00 - 05 புள்ளிகள் வகுப்பாயிடையில் 23% உம்
06 - 10 புள்ளிகள் வகுப்பாயிடையில் 37% உம்
11 - 15 புள்ளிகள் வகுப்பாயிடையில் 28% உம்
16 - 20 புள்ளிகள் வகுப்பாயிடையில் 12% உம்

என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 11 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்கள் 40% ஆவர்.



இவ்வினாவிற்குரிய 09 பிரிவுகள் மற்றும் உப பிரிவுகளில் இலகு தன்மை கூடிய பிரிவு ii(ஆ) என்பதுடன் அதன் இலகுதன்மை 59% ஆகும். அதேபோன்று இலகுதன்மை குறைந்த பிரிவுகள் iv(ஆ), v(அ) (ஆ) பிரிவுகளாகும். அவற்றின் இலகுதன்மைகள் முறையே 31%, 33%, 31% ஆகும்.

நான்காம் வினாவின் (iv) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 31% ஆகும். பொதுவாக முன்னுரிமை தீர்வை வரிச் சலுகை (G.S.P+) தொடர்பிலான விளக்கம் பரீட்சார்த்திகளிடம் காணப்படாமையே இவ்வினாவிற்கான இலகுதன்மை குறைவடைந்தமைக்குக் காரணமாகும். சர்வதேச வியாபாரத்தின்போது பயன்படுத்தப்படுகின்ற ஒப்பந்தங்கள் மற்றும் அதன் நவீன போக்குகள் தொடர்பில் மாணவர்களில் அறிவு, விளக்கம் மேம்படும் வகையில் வகுப்பறையினுள் பல்வேறு செயற்பாடுகளைத் திட்டமிட்டுக்கொள்வது பயனுடையதாகும்.

நான்காம் வினாவின் (v) (அ) உப பிரிவின் இலகுதன்மை 33% ஆகும். இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறுகின்ற முறையினையும் அதன் ஒழுங்கு முறையினையும் முன்வைப்பதற்கு பரீட்சார்த்திகளுக்கு முடியாமையினாலயே இவ்வாறு இதில் இலகுதன்மை குறைவடைந்துள்ளது. எனவே இது தொடர்பிலான விதிகள், மற்றும் நடைமுறை ரீதியான விடயங்களைத் தேடிப்பார்ப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சியளித்தலும் பழக்குதலும் வேண்டும்.

நான்காம் வினாவின் (v) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 31% ஆகும். இதில் குறைந்த இலகுதன்மை ஏற்படுவதற்குக் காரணம் இலத்திரனியல் வணிகம் மற்றும் இலத்திரனியல் வர்த்தகம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை ஒப்பீட்டுரீதியாக முன்வைக்க முடியாமையாகும். இலத்திரனியல் வணிகம் தொடர்பில் கற்றல் கற்பித்தற் செயன்முறையின்போது கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

பகுதி II

5 ஆம் வினா

5. (**i**) (அ) "சரியான கருமங்களைச் சரியான வழியில் செய்தல் முகாமைத்துவமாகும்" என பீற்றர் டிறக்கர் குறிப்பிட்டுள்ளார். இவ்வெண்ணத்தில் உள்ளடங்கியிருக்கும் அடிப்படை முகாமைத்துவக் கூறுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) வினைத்திறன் (Efficiency)
(2) பயனுறுதி (Effectiveness) **(2 x 1 = 2 புள்ளிகள்)**

(ஆ) ஹென்றி மின்ஸ்ற்பேக் என்பவரால் விபரிக்கப்பட்ட முகாமையாளர் ஒருவருக்கான தீர்மானம் எடுத்தல் வகிபாகத்தில் காணப்படும் உப வகிபாகங்கள் **நான்கைப்** பெயரிடுக.

(1) முயற்சியாளர் (Entrepreneur)
(2) பிரச்சினைகள் /தடைகளை கையாள்பவர் (Drsturbance Handler)
(3) வளங்களை ஒதுக்கீடு செய்பவர் (Resouree Allocater)
(4) நடுநிலையானவர். (Negotiater) **(4 x 1/2 = 2 புள்ளிகள்)**

(ii) (அ) கட்டுப்பாட்டு விசாலத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக.

(1) நிறுவனத்தின் வேலையின் தன்மை
(2) மேற்பார்வையாளரின் தேர்ச்சிகள்
(3) ஊழியர்களின் திறமைகள், அனுபவம், தேர்ச்சிகள்
(4) நிறுவன அதிகாரமளித்தல் கொள்கை

(2 x 1 = 2 புள்ளிகள்)

(ஆ) நிறுவனமொன்றின் கூம்பு வடிவிலான **(Pyramid shape)** நிறுவனக்கட்டமைப்பொன்று பிரதிபலிக்கும் **இரண்டு** அடிப்படை விடயங்களைக் குறிப்பிடுக.

(1) உயர் மட்டத்தில் குறைந்தளவான முகாமையாளர்களும் கீழ் மட்டத்தில் அதிகளவான முகாமையாளர்களும் காணப்படுவர்
(2) பல்வேறு விதமான முகாமை மட்டங்கள் காணப்படல்
(3) அதிகார படிநிலையமைப்பு காணப்படல்
(4) வித்தியாசமான திறன்களையுடைய பல்வேறு மட்ட முகாமையாளர்கள் காணப்படல்

(2 x 1 = 2 புள்ளிகள்)

(iii) வணிக நிறுவனமொன்றின் நோக்கங்களின் (**Objectives**) அடிப்படை குணாம்சங்கள் **நான்கைச்** சுருக்கமாக விவரிக்குக.

SMART

S – குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக இருத்தல் **(Specific)**
M – அளவிடக் கூடியதாக இருத்தல் **(Measurable)**
A – அடையக் கூடியதாக / உடன்படக்கூடியதாக இருத்தல் **(Achievable / agreed)**
R – பொருத்தமானதாக / நியாயமானதாக மீளமைக்கக்கூடியதாக / யதார்த்தமானதாக இருத்தல்
(Relavant/Rationale Revisionable/ Realistic)
T – கால வரையறை கொண்டதாக இருத்தல். **(Time bound)**

குறிப்பிட 4 × 1/2 = 2 புள்ளிகள்
விளக்க 4 × 1/2 = 2 புள்ளிகள்

(iv) (அ) பகுத்தறிவான தீர்மானம் எடுத்தல் செயன்முறையின் படிமுறைகள் யாவை?

1. பிரச்சினைகளை இனங்காணல்
2. மாற்றுத்தீர்மானங்களை கட்டியெழுப்புதல்
3. மாற்று வழிமுறைகளை மதிப்பீடு செய்தல்
4. சிறந்த மாற்று வழியினைத் தெரிவு செய்தல்
5. அமுல்படுத்தல்

(ஒழுங்கு முறையில் எழுதப்படல் வேண்டும்)
5 விடயங்களுக்கு 2 புள்ளிகள்
4 விடயங்களுக்கு 1 புள்ளிகள்

(ஆ) இலட்சிய நோக்குக் கூற்றொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய **இரண்டு** அடிப்படைக் கூறுகளைக் குறிப்பிடுக.

1. வாடிக்கையாளர்
2. பொருள் அல்லது சேவை
3. சந்தை
4. சுய எண்ணக்கரு
5. விழுமியம், நலன்கள், தத்துவ முன்னுரிமைகள்
6. நிலைத்து நிற்றல்
7. மக்களின் பிரதிமை
8. தொழில் நுட்பம்
9. ஊழியர்

(2 x 1 = 2 புள்ளிகள்)

(v) (அ) திட்டமிடற் செயன்முறையில் காணத்தக்க **நான்கு** நடைமுறைப் பிரச்சினைகளை எழுதுக.

(1) காலத்திற்கு ஏற்ப சரியான தகவல்களைப் பயன்படுத்தாதிருத்தல்
(2) கடந்தகாலப் போக்கு நடைமுறைத் தரவுகளின் அடிப்படையில் திட்டங்களைத் தயாரித்தல்
(3) இயலுமை, கொள்ளளவு என்பவற்றுக்கு அப்பால் திட்டங்களைத் தயாரித்தல்
(4) அக்கறையும் அர்ப்பணிப்பும் போதுமான அளவு இல்லாதிருத்தல்
(5) நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் காணப்படுகின்ற ஊழியர்களின் தொடர்புகளும் ஒத்துழைப்பும் கிடைக்காதிருத்தல்
(6) அனைத்து முகாமைத்துவ துறைக்கும் திட்டம் பங்களிக்கப்படாதிருத்தல்
(7) திட்டத்தைச் உருவாக்கும்போது அது எதிர்பார்க்கின்ற முறையில் செயற்படுத்தப்பட முடியும் எனும் நம்பிக்கை
(8) திட்டமிடல் செயன்முறையின் குறைவான நம்பிக்கை
(9) திட்டங்களைத் தயாரிப்பதில் திறமையான ஊழியர்களின் பற்றாக்குறை

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) திட்டமிடற் செயன்முறையில் காணத்தக்க **நான்கு** நடைமுறைப் பிரச்சினைகளை எழுதுக.

(1) முழு நிறுவனத்திற்கும் தேவையான இலக்குகளை உருவாக்கவும், செயற்படுத்தவுமான தேவை
(2) தூரநோக்குத் தன்மை, தீர்மானம் எடுத்தல் போன்ற சிந்திக்கும் ஆற்றல்
(3) அமைப்பொன்றின் உள்ளக வெளியக சூழல் தொடர்பாக காணப்படும் விளக்கங்களைப் பெறுதல்
(4) நிறுவனத்தின் சகல பிரிவினையும் கூட்டிணைத்தல்

(1 x 2 = 2 புள்ளிகள்)

5 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும் ஆலோசனைகளும் :



5 ஆம் வினாவினை 64% சதவீதமானோர் தெரிவுசெய்துள்ளனர். (வரைபடம் 02) இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளிகள் வகுப்பாயிடையில் 26% உம்
06 - 10 புள்ளிகள் வகுப்பாயிடையில் 38% உம்
11 - 15 புள்ளிகள் வகுப்பாயிடையில் 29% உம்
16 - 20 புள்ளிகள் வகுப்பாயிடையில் 7% உம்

என புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 11 அல்லது அதைவிடக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 36% என்பதுடன் பரீட்சார்த்திகள் 64% சதவீதமானோர் 10 அல்லது அதை விடக் குறைவாகவே புள்ளிகளையே பெற்றுள்ளனர்.



இவ்வினாவிற்குரிய பிரிவுகள் மற்றும் உப பிரிவுகள் 09 இல் இலகுதன்மை கூடிய பிரிவு 1(அ) பிரிவாகும். என்பதுடன் அதன் இலகுதன்மை 73% ஆகும். அதேபோன்று இலகுதன்மை குறைவான பிரிவு (ii) (அ) என்பதுடன் அதன் இலகுதன்மை 18% ஆகும். ஏனைய பிரிவுகளின் இலகுதன்மை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

ஐந்தாம் வினாவின் (ii) (அ) உப பிரிவின் இலகுதன்மை 18% ஆகும். கட்டுப்பாட்டு விசாலத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பில் தேவையானளவு விளக்கம் காணப்படாமையே மிகக் குறைந்த மட்டத்தில் இவ்வீதம் காணப்படுவதற்கான காரணமாகும். அதே போன்று பரீட்சார்த்திகளில் பகுப்பாய்வு செய்யும் அறிவும் குறைவாகவே காணப்படுகின்றது என்பதும் இதன்மூலம் தெரியவருகின்றது. எனவே கட்டுப்பாட்டு விசாலங்கள் போன்றே அந்த விசாலத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பிலான விளக்கமும் மிக முக்கியமானதாகும். அவற்றைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சேர்த்துக் கொள்ளல் மிகமுக்கியமானதாகும்.

ஐந்தாம் வினாவின் (ii) (ஆ) உப பிரிவின் இலகுதன்மை 34% ஆகும். அமைப்பு வரைபடத்தை கூம்புவடிவில் முன்வைத்தாலும் அவ்வாறான கூம்பு வடிவம் ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் தொடர்பில் கவனம் செலுத்தாமையே இதன் இலகுதன்மை குறைவாகக் காணப்படுவதற்கான காரணமாகும். ஆகவே இவ்வாறான சிறந்த துறைகள் தொடர்பில் கவனத்தை ஈர்க்கச் கூடியவாறு ஒப்படைகளை வழங்கல் பொருத்தமானதாகும்.

ஐந்தாம் வினாவின்(iv) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 21% ஆகும். இலட்சியக் கூற்றொன்றில் உள்ளடங்கும் அடிப்படைகள் தொடர்பில் சரியான விளக்கம் காணப்படாமையே இப்பிரிவில் இலகுதன்மையானது இவ்வாறு மிகக் குறைவான மட்டத்தில் காணப்படுவதற்குக் காரணமாகும். ஆகவே இலட்சியக் கூற்றினை ஆழமாகக் கற்று அவற்றில் உள்ளடங்குகின்ற அடிப்படைகளைச் சரியாக இனங்கண்டு கொள்ளக்கூடியவாறு இலட்சியக் கூற்றொன்றை உருவாக்குவதற்கு வகுப்பறையில் பிரயோகச் செயற்பாடுகளை மேற்கொள்வது முக்கியமானதாகும்.

6 ஆம் வினா

6. (i) ஒழுங்கமைத்தலின்போது இடம்பெறத்தக்க பலவீனங்கள் நான்கைச் சுருக்கமாக விவரிக்குக.

(1) பொருத்தமற்ற முறையில் பணிகளை இனங்காணல்
(2) பொருத்தமற்ற தொழிற் பிரிப்பு
(3) பொருத்தமற்ற திணைக்களப்படுத்தல் முறைகளைத் தெரிவு செய்தல்
(4) போதுமான தன்மையற்ற அதிகார கையளிப்பு இடம்பெறல்
(5) பொருத்தமற்ற ஒருங்கிணைப்பு / பொறுப்புகளின் தன்மை
(6) நியாயமற்ற அதிகாரம்
(7) கட்டளையிடலின் ஓரினத்தன்மையில் சிக்கல்
(8) வளங்களை தேவைக்கேற்ப முறையாகப் பகிராமை
(9) பொருத்தமற்ற கட்டுப்பாட்டு விசாலம் காணப்படல்

(4 x 1 = 4 புள்ளிகள்)

(ii) சட்டப்படியான வலுவை விட முகாமையாளர் ஒருவர் வலுவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வேறு மூலங்கள் **நான்கைப்** பெயரிட்டு, அவற்றுள் ஏதாவது **இரண்டை** விவரிக்குக.

(1) சிறப்பாற்றல் வலு	(Expert Power)
(2) அனுசரணை வலு / ஆளுமை வலு / வசீகரிக்கும் வலு	(Chairsmatic Power / Personality / Referent)
(3) வெகுமதியளிக்கும் வலு	(Reward Power)
(4) தண்டனை வலு	(Coercive Power)
(5) தகவல் வலு	(Information Power)

குறிப்பிட 4 x 1/2 = 2 புள்ளிகள்
விளக்க 4 x 1/2 = 2 புள்ளிகள்

(iii) (அ) ஜனநாயக தலைமைத்துவப் பாங்கு, தலையிடாத் தலைமைத்துவப் பங்கு ஆகியவற்றுக்கிடையிலான **இரண்டு** ஒற்றுமைகளை எழுதுக.

(1) தீர்மானம் எடுத்தலில் ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெறல்
(2) தீர்மானம் எடுக்க ஊழியர்களுக்கு சுதந்திரம் வழங்குதல்
(3) ஊழியர்களை நம்புதல்
(4) ஊழியர்களுக்கு வெகுமதி வழங்குவதில் உள்ள அக்கறை

(2 x 1 = 2 புள்ளிகள்)

(ஆ) கீழ்மட்ட (**Floor - level**) ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக வணிகமொன்று பயன்படுத்தக்கூடிய **நான்கு** முறைகளைத் தருக. .

(1) கடன் வசதிகளை வழங்குதல்
(2) மிகை ஊதியக் கொடுப்பனவுகளை வழங்குதல்
(3) நிறுவன உற்பத்திப் பொருட்களை மலிவு விலையில் வழங்குதல்
(4) ஊழியர்களைப் பயிற்றுவித்தல்
(5) பதவி உயர்வுகளை வழங்குதல்
(6) நலன்புரிச் சேவைகளை வழங்குதல்
உதாரணம் : விடுதி, உணவு, குடிபானம், சீருடைகள்
(7) பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
(8) தொழிற் பாதுகாப்பை உருவாக்கிக் கொடுத்தல்
(9) கூடுதலான சம்பளங்களும் கூலிகளும்

(10) ஊழியர்களைப் பாராட்டுதல்

(11) தீர்மானம் எடுத்தலில் ஊழியர்களின் பங்களிப்பைப் பெறல்

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

(iv) (அ) நிறுவனமொன்றின் முறைசாராத் தொடர்பாடலின் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

அனுகூலங்கள்	**பிரதிகூலங்கள்**
1. சிக்கலான தகவல்களை இலகுவாகப் பெறமுடிதல்	1. பிழையான தகவல்களால் களங்கம் ஏற்படல்
2. தகவல்களைத் தொடர்பாடுவதற்கான செலவு குறைவு	2. பிரதிமையில் களங்கம் ஏற்படல்
3. தகவல்கள் பெரும்பாலான நபர்களை விரைவாகச் சென்றடைதல்	3. கட்டுப்படுத்துவதில் சிக்கல்
4. முறை சார்ந்த தொடர்பாடலை விட அதிக நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளும் தன்மை	4. ஒழுங்கீனப் பிரச்சினைகள்
5. தனிநபர் தொடர்பு பலமாக இருத்தல்	5. கவனத்தைத் திசைதிருப்பும் சிதைவடைந்த தகவல்கள்

(2 x 1/2= 1 புள்ளி) (2 x 1/2 = 1 புள்ளி)

(ஆ) நிறுவன அதிகார வரிசையின் படி மேல்மட்ட முகாமையிலிருந்து கீழ்மட்ட முகாமைக்குத் தொடர்பாடப்படும் **இரண்டு** வகையான தகவல்களையும் கீழ்மட்ட முகாமையிலிருந்து மேல்பட்ட முகாமைக்குத் தொடர்படும் **இரண்டு** வகையான தகவல்களையும் எழுதுக.

மேல்மட்ட முகாமையிலிருந்து கீழ்மட்ட முகாமைக்கு	**கீழ்மட்ட முகாமையிலிருந்து மேல்மட்ட முகாமைக்கு**
1. முகாமைத் தீர்மானங்கள்	1. வகை கூறல்
2. திட்டமிடல்	2. ஊழியர் மனத்தாங்கல்
3. அதிகாரக் கையளிப்பு	3. ஊழியர் முரண்பாடு
4. தொழிற்பிரிப்பு	4. வேலை பற்றி முறைப்பாடு
5. பிரிவுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு	5 ஊழியர் சிபார்சு
6. பாராட்டுதலும் புகழ்தலும்	

(2 x 1/2= 1 புள்ளி) (2 x 1/2 = 1 புள்ளி)

(v) கட்டட ஒப்பந்தக்காரரான கருணா என்பவர் தனது முன்னைய செயற்றிட்டங்களின்போது கட்டட மூலப்பொருட்கள் வீணாணமையும் குறித்த நேரத்தில் செயற்றிட்டங்களின்போது மூலப் பொருட்கள் வீணாகுவதைக் குறைப்பதற்கும் உரிய காலப்பகுதியினுள் செயற்றிட்டங்களை நிறைவு செய்வதற்குமென கருணா பின்பற்றத்தக்க கட்டுப்பாட்டு முறைகள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக.

மூலப்பொருட்கள் வீணாகுவதைக் குறைத்தல்	**உரிய காலப் பகுதியில் நிறைவு செய்தல்**
1. சரக்கிருப்பு கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றல்.	1. கால அட்டவணையைத் தயாரித்து பயன்படுத்தல்
2. தர நியமங்களைக் கருத்திற் கொள்ளுதல்	2. நடவடிக்கை அட்டவணைகளைக் கண் காணித்தல்.
3. தரக்கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றுதல்	3. வேறுபாடுகள் காணப்படின் உடனடியாக மாற்று வழிகளை இனங் காணல்
4. ஊழியர் மேற்பார்வை முறைகள்	4. ஊழியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
5. ஊழியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்	

(4 புள்ளிகள்)

6 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :



6ஆம் வினாவினைத் 58% சதவீதமானோர் தெரிவு செய்திருந்தனர். (வரை படம் 02) இவ்வினாவிற்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளிகள் வகுப்பாயிடையில் 28% உம்
06 - 10 புள்ளிகள் வகுப்பாயிடையில் 34% உம்
11 - 15 புள்ளிகள் வகுப்பாயிடையில் 29% உம்
16 - 20 புள்ளிகள் வகுப்பாயிடையில் 9% உம்

என புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 11 புள்ளிகள் அல்லது அதைவிடக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 38% ஆவர்.



இவ்வினாவிற்குரிய உபபிரிவுகள் 07 இல் இலகுதன்மை கூடிய பிரிவு iii (ஆ) என்பதுடன் அதன் இலகுதன்மை 68% ஆகும். அதேபோன்று இலகுதன்மை குறைந்த பிரிவு (v) என்பதுடன், அதன் இலகுதன்மை 24% ஆகும். ஏனைய பிரிவுகளின் இலகுதன்மை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

ஆறாம் வினாவின் (ii) ஆம் பிரிவின் இலகுதன்மை 39% ஆகும். இவ்வினாவிற்கு குறைந்த இலகுதன்மை காணப்படுவதற்கான காரணம் முகாமையாளருக்கு அதிகாரம் கிடைக்கப்பெறுகின்ற பிரதான மூலங்கள் தொடர்பில் எந்தவிதமான விளக்கமுமின்றிப் பதிலளித்துள்ளமையேயாகும். அதற்கேற்ப அதிகாரம் கிடைக்கப்பெறுகின்ற மூலங்கள் தொடர்பிலான விளக்கம் கிடைக்கும் வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படல் பொருத்தமானதாகும்.

ஆறாம் வினாவின் (iv) (ஆ) உப பிரிவின் இலகுதன்மை 39% ஆகும். முகாமைத்துவப் பதவிகளிடையே தொடர்பாடல் செய்யப்படுகின்ற தகவல் தொடர்பில் சிறந்த விளக்கம் காணப்படாமையே இவ்வாறு இலகுதன்மை குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்குரிய காரணமாகும். எந்தவொரு நிறுவனத்திலும் மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் தொடர்பாடல் செய்யப்படுகின்ற தகவல்களை பிரயோகரீதியான செயற்பாடுகளினூடாக உறுதிப்படுத்தி கற்பித்தலை மேற்கொள்வது பொருத்தமானதாகும்.

ஆறாம் வினாவின் (v) ஆம் பிரிவின் இலகுதன்மை 24% ஆகும். சிறிய நிகழ்வொன்றின் உதவியுடன் விடையெழுதுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு விளக்கமில்லாமையே இவ்வினாவின் இலகுதன்மை இவ்வாறு மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்குரிய காரணமாகும். ஆக்கபூர்வமான சிந்தனையினை உறுதிப்படுத்தும் வகையில் நிகழ்வுக்கற்கைகளின் உதவியுடனும் பாடரீதியான பிரயோகச் செயற்பாடுகளினூடாகவும் சிறந்த மாணவர்களில் விடையெழுதும் திறனை வளர்க்க முடியும்.

7 ஆம் வினா

7. (**i**) செல்லிடத் தொலைபேசியை ஓர் உதாரமாகக் கொண்டு உற்பத்திப் பொருளொன்றின் வித்தியாசமான ஐந்து மட்டங்களில் ஏதேனும் **நான்கு** மட்டங்களை விவரிக்குக.

(1) மைய நலன் (Core Benifit) :- அழைப்பு உள் வருகையும் வெளிச் செல்லலும்
(2) அடிப்படை உற்பத்திப் பொருள் (Basic Product) : - Clear Sound, Key Board
(3) எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திப் பொருள் (Expected Product) :- Camera, Bluetooth, Colour size
(4) விருத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருள் (Augmented Product) : - தொழில்நுட்பக் கூறுகளை இணைத்தல் (Wats App, Face book, Skype)
(5) எதிர்கால உற்பத்திப் பொருள் (Potential Product) :- any Creative Idea of Students

மட்டங்களைக் குறிப்பிட 4 x 1/2 = 2 புள்ளிகள்
உதாரணம் - மாணவர் விடைக்கேற்ப 4 x 1/2 = 2 புள்ளிகள்

(**ii**) (அ) பொதியொன்றை வடிவமைக்கும்போது அதன் பொருத்தமான தன்மையைப் பரிசோதிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** சோதனைகளைக் (பரப்புகளைக்) குறிப்பிடுக.

(1) தொழில்நுட்பப் பொருத்தப்பாடு பற்றிய சோதனை
(2) நிறங்களும் வாசிப்பதற்கான இலகுதன்மையும் பற்றிய சோதனை
(3) உறுதித்தன்மை மற்றும் நீண்டகாலப் பாவனை பற்றிய சோதனை
(4) உற்பத்திப் பொருளின் நீண்டகால வாழ்வுத் தன்மை பற்றிய சோதனை
(5) சூழலுக்கு ஏற்றதாக இருத்தல் பற்றிய சோதனை
(6) கொண்டு செல்லக் கூடியதாக இருத்தல் பற்றிய சோதனை
(7) இரசாயனத் தாக்கம் பற்றிய சோதனை
(8) சில்லறை வியாபாரி நுகர்வோர் தொடர்பான மனப்பாங்கு பரிசீலனை பற்றிய சோதனை

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) பயனுறுதியான பரிமாற்றத்துக்காகத் திருப்திப்படுத்த வேண்டிய நான்கு நிபந்தனைகளைப் பட்டியலிடுக.

(1) ஆகக்குறைந்தது இரு பிரிவினர்கள் இருத்தல் வேண்டும்.
(2) ஒவ்வொரு பிரிவினரிடமும் பெறுமதியுள்ள ஏதாவது ஒன்று இருத்தல் வேண்டும்.
(3) ஒவ்வொரு பிரிவினரிடையேயும் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் வழங்குவதற்குமான திறன் இருத்தல் வேண்டும்.
(4) ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒன்றை ஏற்றுக் கொள்வதற்கும் அதை நிராகரிப்பதற்கும் சுதந்திரம் இருத்தல் வேண்டும்.
(5) ஒவ்வொரு பிரிவினரும் மற்றவருடன் தொடர்பாடுவது பொருத்தமானது என நம்புதல் வேண்டும்.

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

(**iii**) (அ) 'பேனா' மற்றும் 'மூக்குக் கண்ணாடி' ஆகிய பொருட்களை உற்பத்தி செய்வதற்கு மிகப் பொருத்தமான உற்பத்தி முறைகளைக் **(Production methods)** குறிப்பிட்டு, அதற்கான காரணங்களைத் தருக.

(1) பேனா :- தொகுதி உற்பத்தி அல்லது பாய்ச்சல் உற்பத்தி
மூக்குக் கண்ணாடி :- வேலை உற்பத்தி

(2 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தி நிறுவனமொன்றில் உற்பத்தித் தள அமைப்பை வடிவமைக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** விடயங்களை எழுதுக.

(1) உற்பத்திச் செயன்முறையின் தன்மை
(2) இயந்திரப் பாவனையின் நெகிழ்வுத் தன்மை
(3) பயன்படுத்தப்படும் உற்பத்தி தொழில் நுட்பமுறைகள்
(4) ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் போதுமான இடவசதி.
(5) வாடிக்கையாளரின் ஈடுபாடு

(6) சட்டரீதியான தன்மை
(7) கவர்ச்சிகரமான தன்மை
(8) மேற்பார்வை செய்தல் தொடர்பான விடயங்கள் / துப்பரவு / பராமரிப்பு

(2 புள்ளிகள்)

(**iv**) கடந்த சில ஆண்டுகளாக நிறுவனமொன்றின் செயற்பாட்டு வருமானத்தில் படிப்படியானதொரு வீழ்ச்சி காணப்பட்டது. இந்த நிறுவனம் செயற்பாட்டு வருமானத்தினை அதிகரிக்கச் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** விடயங்களை எழுதுக.

(1) உற்பத்திப் பொருள் பேதப்படுத்தல்
(2) விளம்பரமும் மேம்படுத்தல் முறைகளும்
(3) நேரடி சந்தைப்படுத்தல்
(4) விரய முகாமை, தனியார் விற்பனையை ஊக்குவித்தல்
(5) உற்பத்திப் பொருள் அபிவிருத்தி
(6) பொதுமக்கள் தொடர்பை அதிகரித்தல்
(7) கிரயக்கட்டுப்பாட்டு முறை.

(4 புள்ளிகள்)

(**v**) பொது வரையறுத்த கம்பனி ஒன்றிற்குக் கிடைக்கக்கூடிய வெளிவாரி நிதி மூலங்கள் இரண்டைப் பெயரிட்டு, அந் நிதிமூலங்களின் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

(1) பங்கு வழங்கல்
(2) வங்கிக் கடன் பெறுதல்
(3) வணிகப் பத்திரம்
(4) தொகுதிக் கடன் வழங்கல்
(5) குத்தகை வசதிகள்

பெயரிட	**2 x 1 = 2 புள்ளிகள்**
அனுகூலம்	**2 x 1/2 = 1 புள்ளி**
பிரதிகூலம்	**2 x 1/2 = 1 புள்ளி**

7 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :



7ஆம் வினாவினைத் தெரிவு செய்துள்ள பிரிவினர் 48% ஆகும் (வரை படம் 02) இவ்வினாவிற்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளிகள் வகுப்பாயிடையில் 24% உம்
06 - 10 புள்ளிகள் வகுப்பாயிடையில் 29% உம்
11 - 15 புள்ளிகள் வகுப்பாயிடையில் 34% உம்
16 - 20 புள்ளிகள் வகுப்பாயிடையில் 13% உம்

என புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 11 அல்லது அதைவிடக் கூடிய புள்ளிகளை 47% சதவீதமானோர் பெற்றுள்ளனர்.



இவ்வினாவிற்குரிய 7 உபபிரிவுகளில் இலகுதன்மை கூடிய பிரிவு iii (அ) என்பதுடன் அதன் இலகுதன்மை 69% ஆகும். அதேபோன்று இலகுதன்மை குறைவான பிரிவு iii (ஆ) என்பதுடன் அதன் இலகுதன்மை 27% ஆகும். ஏனைய பிரிவுகளின் இலகுதன்மை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

ஏழாம் வினாவின் (ii) (அ) உப பிரிவின் இலகுதன்மை 31% ஆகும். பொதியுறை ஒன்றைத் தயாரிக்கும் போது அதன் பொருத்தப்பாட்டினைப் பரீசீலிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய சோதனை தொடர்பில் பரீட்சார்த்திகளிடம் சிறந்த விளக்கம் காணப்படாமையே இவ்வாறு இவ்வினாவின் இலகுதன்மை குறைவாக காணப்படுவதற்கான காரணமாகும். உற்பத்திப் பொருட்களுக்கு பல்வேறு பொதியுறைகள் உருவாக்கப்படுவதுடன் அவ்வாறு பொதியுறைகளை உருவாக்கும்போது அதன் பொருத்தப்பாட்டினைப் பரிசோதனை செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பரிசோதனைத் துறைகளை முன்வைப்பதற்கு ஏற்றவாறு மாணவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கேற்றவாறான பிரயோகச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

ஐந்தாம் வினாவின் (iii) (ஆ) உப பிரிவின் இலகுதன்மை 27% ஆகும். உற்பத்தித் தள அமைப்பினை உருவாக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் சிறந்த விளக்கம் காணப்படாமையே இவ்வாறு குறைந்த இலகுதன்மை காணப்படுவதற்குரிய காரணமாகும். எனவே தொழிற்சாலையொன்றில் உற்பத்தித் தள அமைப்பை உருவாக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய துறைகள் தொடர்பிலான துறைசார் கல்விச் சுற்றுலாக்களினூடாக அவற்றைச் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து பிரயோகரீதியான அறிவினைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

ஏழாம் வினாவின் (iv) ஆம் பிரிவின் இலகுதன்மை 40% மாகும். அதற்கான காரணம் நிறுவனமொன்றின் செயற்பாட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய உபாய வழிமுறைகள் தொடர்பில் பரீட்சார்த்திகளிடம் விளக்கம் காணப்படாமையேயாகும். வகுப்பறையில் இது தொடர்பிலான பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் மாணவர்களுக்கு சிறந்த விளக்கத்தை பெற்றுக்கொடுக்க முடியும்.

8 ஆம் வினா

8. (i) எழுதுவினைஞர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இணையத்தினூடாக விண்ணப்பங்களைக் கோருவதன் மூலம் ஒரு நிறுவனத்திற்குக் கிடைக்கும் இரண்டு அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் தருக.

அனுகூலம்	பிரதிகூலம்
1. செலவு குறைவு 2. விரைவானது 3. இலகுவாக அறிகையிட முடிதல். 4. களஞ்சியப்படுத்தல் இலகு 5. கூடுதலான விண்ணப்பங்கள் கிடைத்தல் 6. ஒப்பீடு செய்தல் இலகு 7 இலகுவாக பொருத்தமான விண்ணப்பதாரியை இனங்காண முடிதல்.	1. இணையத்தள வசதியற்ற தகுதியான விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியாமை 2. சில திறன்களை அறிய முடியாது. (கையெழுத்து, சாரதி அனுமதிப் பத்திரம்) 3. தேவைப்பாட்டை விடக் கூடுதலான விண்ணப்பங்கள் கிடைத்தல். 4. தொழினுட்ப கோளாறுகள்
(2 புள்ளிகள்)	**(2 புள்ளிகள்)**

(ii) நிர்மலா என்பவர் ஐந்து மாதங்களுக்கு முன்னர் ABC நிறுவனத்தில் ஆறு மாதங்களைக் கொண்ட தகுதிகாண்கால அடிப்படையில் ஒரு முகாமைத்துவ உதவியாளராக இணைந்து கொண்டார். ஆரம்பத்தில் இருந்தே நிறுவன முகாமையானது அவரது வேலையின் தரத்தில் திருப்தி கொள்ளவில்லை. நிர்மலா தொடர்பில் முகாமையானது எடுக்கக்கூடிய **நன்கு** தீர்மானங்களைக் குறிப்பிடுக.

(1) தகுதிகாண் காலத்தை நீடித்தல்
(2) வாய்மொழி மூலமாக எச்சரிக்கை விடுத்தல்
(3) எழுத்து மூலமான எச்சரிக்கை விடுத்தல்
(4) பயிற்சி வழங்கல்
(5) வேலை நிபந்தனைக்கு ஏற்ப இடமாற்றம் வழங்கல்
(6) வேலையை முடிவுறுத்தல் **(4 x 1 = 4 புள்ளிகள்)**

(iii) (அ) தகவல் முறைமையைப் பாதுகாப்பதற்குக் கம்பனி ஒன்று பயன்படுத்தக்கூடிய பாதுகாப்பு முறைகள் **நான்கு** தருக.

(1) அனுமதியளிக்கப்பட்ட நபர்களை மட்டும் பயன்படுத்துதல்
(2) இரகசிய குறியீடுகள் / கடவுச்சொல் (Pass word) பயன்படுத்துதல்
(3) தீச்சுவர் (Firewalls) பயன்படுத்தல்
(4) நச்செதிர்ப்பி (Anti Virus) பயன்படுத்தல்
(5) காப்பு நகல் (Backup) முறை பயன்படுத்தல்
(6) கொள்கைகளும் வழிகாட்டலும்
(7) பயிற்சி

(4 x 1 / 2 = 2 புள்ளிகள்)

(ஆ) தரவு, தகவல் ஆகியவற்றை ஒப்பிட்டு. அவற்றுக்கிடையிலான **இரண்டு** வேறுபாடுகளை எழுதுக.

தரவு	தகவல்
1. தரவுகளை ஒழுங்கமைக்கும் செயற்பாட்டிற்கு உருமாற்றும் ஆரம்ப விடயம் தரவுகள் ஆகும். 2. தீர்மானங்கள் எடுப்பதற்கு இதனை நேரடியாகப் பயன்படுத்த முடியாது. 3. தரவு, தரவாகக் காணப்படும்போது பெறுமதி அற்றதாகும். 4. மூலப்பொருளொன்றாகும்.	1. தரவுகளை ஒழுங்கமைக்கும் செயற்பாட்டில் உருவாகின்ற விளைவு தகவலாகும். 2. தீர்மானங்கள் எடுப்பதற்கு இதனை நேரடியாகப் பயன்படுத்த முடியும். 3. தகவல்கள் பெறுமதி உடையவையாகக் கருதப்படும். 4. முடிவுப்பொருளொன்றாகும்.

ஒப்பிடல் அவசியம் 1 x 2 = 2 புள்ளிகள்

(iv) நிறுவனமொன்றின் செயற்பாட்டு மட்டத்தில் கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமையைப் (TPS) பயன்படுத்தக்கூடிய முகாமைத்துவத் தொழிற்பாடுகள் **இரண்டைப்** பெயரிட்டு, ஒவ்வொரு தொழிற்பாட்டிற்கும் **இரண்டு** கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமைகள் வீதம் தருக.

(1) உற்பத்தித் துறை - பொருட்களைக் கட்டளையிடுவதல்
பொருட்களை கொள்வனவு செய்வதல்

(2) சந்தைப்படுத்தல் துறை - விற்பனைக் கட்டளைகளை பெற்றுக் கொள்ளல்
விலையிடல்

(3) நிதி/ கணக்கீட்டுத் துறை - வரவு செலவுத்திட்ட அட்டவணையை தயாரித்தல்
பொதுப் பேரேட்டினை தயாரித்தல்
காசுக் கொடுப்பனவினை மேற்கொள்ளல்

(4) மனிதவளத் துறை - ஊழியர் வருகையினைப் பதிவு செய்தல்
சம்பளப் பட்டியலைத் தயாரித்தல்
பயிற்சி அபிவிருத்தி

2 தொழிற்பாடுகளுக்கு 2 x 1 = 2 புள்ளிகள்
4 கொடுக்கல் வாங்கல்களுக்காக 4 x 1/2 = 2 புள்ளிகள்

(v) (அ) வணிகத் திட்டம் ஏன் முக்கியமானது என்பதற்கு **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.

(1) வணிகக் கருமங்களை கொண்டு நடாத்துவதற்கான வழிகாட்டலுக்கு
(2) வணிகம் தொடர்பாக அக்கறை காட்டும் தரப்பினருக்கு அது தொடர்பான சிறந்த தெளிவினை வழங்குவதற்கு
(3) வணிகத்திற்குத் தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு

(2 x 1 = 2 புள்ளிகள்)

(ஆ) வணிகத் திட்டமொன்றின் ஒரு பகுதியாக செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான **நான்கு** தேவைப்பாடுகளைத் தருக.

(1) எதிர்காலச் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக முன்னரே விளக்கமொன்றை பெற்றுக்கொள்ள முடியுமாயிருத்தல்.
(2) உற்பத்திச் செயன்முறையின் போது ஏற்படுகின்ற வீண் விரயம், கால தாமதம் என்பவற்றை குறைக்க முடியும்.
(3) உற்பத்திச் செயன்முறையினைத் தடையின்றித் தொடர்ச்சியாக மேற்கொள்ள முடிதல்
(4) பொருளின் தரத்தை உயர்த்தும் இயலுமை
(5) பொருத்தமான பணிகளுக்கேற்ப வளங்களை ஒதுக்கீடு செய்தல்

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

8 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :



8ஆம் வினாவினை 67% சதவீதமானோர் தெரிவு செய்திருந்தனர் (வரை படம் 02). இவ்வினாவிற்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளிகள் வகுப்பாயிடையில் 15% உம்
06 - 10 புள்ளிகள் வகுப்பாயிடையில் 44% உம்
11 - 15 புள்ளிகள் வகுப்பாயிடையில் 31% உம்
16 - 20 புள்ளிகள் வகுப்பாயிடையில் 10% உம்

என புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 11 புள்ளிகள் அல்லது அதைவிடக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 41% ஆவர்.



இவ்வினாவிற்குரிய 07 உபபிரிவுகளில் இலகுதன்மை கூடிய பிரிவு (i) என்பதுடன் அதன் இலகுதன்மை 66% ஆகும். இலகுதன்மை குறைந்த பிரிவு (iv) ஆகும் என்பதுடன், அதன் இலகுதன்மை 19% ஆகும். ஏனைய பிரிவுகளின் இலகுதன்மை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

எட்டாம் வினாவின் (iii) (அ) ஆம் பிரிவின் இலகுதன்மை 42% ஆகும். தகவல் முறைமையினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வணிகமொன்று பயன்படுத்தக்கூடிய பாதுகாப்பு முறைகளின் பிரயோகரீதியான பயன்பாடு தொடர்பிலான விளக்கம் பரீட்சார்த்திகளிடம் காணப்படாமையே இவ்வாறு இலகுதன்மை காணப்படுவதற்குரிய காரணமாகும். தகவல் முறையினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தற்போதுள்ள நவீன பாதுகாப்பு முறைகள் தொடர்பிலான விளக்கம் கிடைக்கும் வகையில் பல்வேறு பிரயோகச் செயற்பாடுகளை பாடசாலை கணினி விஞ்ஞானகூடத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும். அதனூடாக மாணவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை இற்றைப்படுத்த முடியுமாயிருக்கும்.

எட்டாம் வினாவின் (iv) ஆம் பிரிவின் இலகுதன்மை 19% ஆகும். செயற்பாட்டு மட்டத்தின்போது கொடுக்கல் வாங்கல் தயாரிப்பு முறையினைப் பயன்படுத்தக்கூடிய முகாமைத்துவத் தொழிற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு விடையளிப்பதற்கு இயலாமல் போனமையே இப்பிரிவில் குறைந்த இலகுதன்மை காணப்படுவதற்குரிய காரணமாகும். ஒவ்வொரு முகாமைத்துவ தொழிற்பாட்டின்போதும் கொடுக்கல் வாங்கல் தயாரிப்பு முறைக்கு வழங்கப்படுகின்ற தொழிற்பாடு தொடர்பில் கற்றல் கற்பித்தற் செயன்முறையில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்தை ஒழுங்கமைத்தல் மிகப்பொருத்தமானதாகும்.

எட்டாம் வினாவின் (v) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 32% ஆகும். இவ்வாறு குறைந்த மட்ட இலகுதன்மை கிடைத்தமைக்குரிய காரணம் வணிகத் திட்டமொன்றின் உள்ளடக்கங்கள் மற்றும் அந்த உள்ளடக்கங்களைத் தயாரிப்பதன் முக்கியத்துவம் என்பவை தொடர்பிலான போதுமானளவு அறிவு பரீட்சார்த்திகளுக்குக் காணப்படாமையேயாகும். எனவே வணிகத் திட்டமொன்றில் உள்ளடங்கியுள்ள விடயங்களை அறிமுகப்படுத்தி வகுப்பறையில் பிரயோகரீதியான செயற்றிட்டமொன்றைத் தயாரிப்பதற்கான வழிகாட்டலை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

2.2.3 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பிலான முழுமையான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்:

க.பொ.த(உ.தர)ப் பரீட்சை - 2017
32- வணிகக் கல்வி - வினாத்தாள் - II
வினாக்களைத் தெரிவு செய்துள்ள முறையும் வினாக்களின் இலகுதன்மையும்



வினா இலக்கம்

வினாத்தாள் II இல் 01, 02, 03, 04 ஆகிய வினாக்கள் I ஆம் பகுதிக்குரியவையாகும். இலக்கம் 05, 06, 07, 08 ஆகிய வினாக்கள் பகுதி II இற்குரியதாகும். அப்பகுதிகள் இரண்டில் குறைந்தது ஒரு பகுதியிலிருந்து இரண்டு வினாக்கள் வீதம் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

பகுதி I இன் 56% சதவீதமான உயர்ந்த இலகுதன்மையினை மூன்றாவது வினாவில் காணமுடிந்ததுடன் குறைந்த இலகுதன்மையான 45% சதவீதத்தை நான்காவது வினாவில் காணலாம்.

பகுதி II இன் 50% சதவீதமான உயர்ந்த இலகுதன்மையினை ஏழாவது வினாவிலும் குறைந்த இலகுதன்மையான 43% சதவீதத்தை ஆறாவது வினாவிலும் காணலாம்.

I ஆம் II ஆம் பகுதிகளின் பொதுவான இலகுதன்மையினை பார்க்கும்போது I ஆம் பகுதியின் முழுமையான சராசரி இலகுதன்மை 51% ஆகும். அதே போன்று II ஆம் பகுதியாக முழுமையான சராசரி இலகுதன்மை 47% ஆகும்.

பகுதி - III

3 விடையளிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

3.1 விடையளிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

பொது அறிவுறுத்தல்கள்:

★ வினாப்பத்திரத்திலுள்ள முக்கியமான அறிவுறுத்தல்களை வாசித்து நன்றாக விளங்கிக் கெள்ளல் வேண்டும். அதாவது ஒவ்வொரு பகுதியிலிருந்தும் எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். கட்டாய வினாவிற்கு எவ்வளவு புள்ளிகள் கிடைக்கும், வழங்கப்பட்டுள்ள நேரம் எவ்வளவு போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், வினாக்களை நன்றாக வாசித்து விடையளிப்பதற்கு எதிர்பார்க்கும் வினாக்கள் தொடர்பில் தெளிவான விளக்கமொன்றை ஏற்படுத்திக் கொண்டு வினாக்களுக்கான விடைகளை எழுதுதல் வேண்டும்.

★ வினாத்தாள் I இல் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

★ வினாத்தாள் II இல் பகுதி I பகுதி II ஆகிய ஒவ்வொன்றிலிருந்தும் குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும். இதற்கான நேரம் 03 மணித்தியாலமாகும்.

★ ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது புதிய பக்கத்தில் ஆரம்பிக்க வேண்டும்.

★ பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை குறித்த இடத்தில் எழுதுதல் வேண்டும்.

★ வினா இலக்கம் மற்றும் உப பிரிவுகளின் இலக்கம் என்பனவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும்.

★ அனைத்து வினாக்களையும் நன்றாக வாசித்து விடை எழுதுதல் வேண்டும். வினாவின் கீழ் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் எழுத வேண்டிய விடைகள், அல்லது அடைய வேண்டிய பெறுபேறுகள் யாவை என்பது தொடர்பில் தெளிவாக விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

★ வினாக்களுக்கு விடையளிக்கும்போது வழங்கப்பட்ட காலத்தை உரியவாறு முகாமைத்துவம் செய்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

★ தெளிவான கையெழுத்தில் விடையெழுதுதல் வேண்டும். விடையெழுதும்போது நீலம் அல்லது கருப்பு பேனாவினை மாத்திரமே பயன்படுத்துதல் வேண்டும். ஏனைய பேனைகளை பயன்படுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும்.

★ குறித்த சுருக்க விடையெழுத வேண்டிய சந்தர்ப்பத்தில் நீண்ட விளக்கத்துடன் கூடிய விடையை எழுதாதிருப்பதுடன் விரிவான விடையெழுத வேண்டிய சந்தர்ப்பத்தில் சுருக்க விடை எழுதாதிருத்தலும் வேண்டும்.

விசேட அறிவுறுத்தல்கள்:

* வினா இலக்கம் 01 தொடக்கம் 30 வரையான பல்தேர்வு வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய இடத்தில் சரியான தெரிவின் இலக்கத்தை பேனையினால் எழுதுதல் வேண்டும்.

* வினா இலக்கம் 31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடையினை உரிய இடத்தில் எழுதி வெற்றிடத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

* வினா இலக்கம் 41 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குரிய விடையினை உரிய வெற்றிடத்தில் எழுதுதல் வேண்டும்.

* ஒவ்வொரு வினாவின் கீழுள்ள சகல உப பிரிவுகளுக்கும் சரியான இலக்குடன் கூடிய விடையினை எழுதுதல் வேண்டும்.

* தர்க்கரீதியாகவும், பகுப்பாய்வுரீதியாகவும் குறித்த விடயங்களை முன்வைத்தல் வேண்டும்.

3.2 கற்றல் - கற்பித்தல் செய்முறைகள் தொடர்பிலான கருத்துகளும் ஆலோசனைகளும்.

* வணிகக் கல்விப் பாடத்தின் தன்மை தொடர்பில் ஆசிரியர்கள் ஆழமான மற்றும் விரிவான விளக்கத்துடனும், இற்றைப்படுத்தப்பட்ட அறிவுடனும் கற்றல் கற்பித்தற் செயன்முறையில் பிரவேசித்தல் வேண்டும். வணிகக் கல்வியானது நாளுக்கு நாள் மாற்றமடைந்து வருகின்ற பல்வேறு பாடவிடயங்கள் தொடர்பில் ஆசிரியர் அறிந்து கொள்வது அவசியமாகும்.

* வணிகக் கல்விப் பாடமானது கோட்பாட்டுரீதியான அறிவிற்கு அப்பால் வியாபித்துச் செல்கின்ற பாடமொன்றாகும். அதனால் அப்பாடத்தின் மீது அன்பு காட்டுவதற்கும் அப்பாடத்துறையினுள் வாழ்வதற்கும் (Love & Live) ஆசிரியர் பழகிக் கொள்வதுடன், மாணவர்களுக்கும் அது தொடர்பில் வழிகாட்டுதல் வேண்டும்.

* வணிகக்கல்விப் கற்பிக்கும் ஆசிரியர் வகுப்பறையில் இடம்பெறுகின்ற கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்கு மேலதிகமாக குழுச்செயற்பாடு, களச்சுற்றுலா செயற்றிட்டம், கண்காட்சி, முன்வைத்தல் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கியதாக பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி பாடம் தொடர்பில் அறிவூட்டுதல் வேண்டும். பாடத்தில் காணப்படுகின்ற எண்ணக்கருக்களை உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற சகல சந்தர்ப்பங்களிலும் நிகழ்வுகளைப் பயன்படுத்துதல் வேண்டும். இச்செயற்பாடுகளின்போது மாணவர்களின் உச்ச பங்களிப்பிற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் வேண்டும்.

* நவீன வணிக, உலகில் வணிகக் கருமங்கள் இணைய வலையமைப்பு போன்ற நவீன தொழில் நுட்பத்தினூடாக இடம்பெறுவதனால் பாட அறிவினை உறுதிப்படுத்துவதற்காக வசதிக்கேற்ப காணொளிக் காட்சிகள் கணினி மென்பொருள்கள், இணையப் பாவனை, பல்லூடகக் கருவிகள், ஸ்மார்ட் வகுப்பறை (SMART CLASS ROOM) போன்ற நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல் பொருத்தமானது.

* பாடம் தொடர்பான விளக்கம் மற்றும் வணிகத்தை இற்றைப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் வெளியீடுகள், வருடாந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள், பாடவிடயத்துடன் தொடர்புடைய கட்டளை சட்டங்கள், கட்டளைகள், சட்டதிட்டங்கள், நிறுவனரீதியான வசதிகளை வழங்குகின்ற பாவனையாளர் கருமங்கள் தொடர்பிலான அதிகாரசபை, இலங்கை தரக் கட்டளைகள் பணியகம் போன்ற அமைப்புக்களின் சட்டரீதியான வெளியீடுகளைப் பரிசீலித்தல் வேண்டும்.

* வணிகக் கல்விப் பாடத்திட்டத்தின் நோக்கத்தைப் பரீட்சிக்கும்போது கற்றல் - கற்பித்தற் செயன்முறையினூடாக நிறைவேற்றிக் கொள்ளவேண்டிய சிறப்பு நோக்க முறைமையொன்று காணப்படுகின்றது. அந்நோக்கங்கள் பிரதானமாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, திறன் மனப்பாங்கு போன்றவற்றைப் வழங்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக தனிநபர் தொடர்புகளைக் கட்டியெழுப்பக் கூடியவாறு வாழ்க்கைப் பழக்கங்களாக கற்றல் பேறுகள் உருவாக்கப்படல் வேண்டும். அந் நோக்கங்களை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு ஏற்றவாறு வணிகக் கல்விப் பாடத்தைக் கற்பிக்கும்போது ஆசிரியர் பல்வேறு முறைகளைப் பின்பற்றுவதற்கு முயற்சித்தல் வேண்டும். ஆசிரியர் அறிவுரை வழிகாட்டியினூடாக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களைப் பயன்படுத்துதல் கற்றல் - கற்பித்தல் வேலைத்திட்டத்திற்கு உதவியாக அமையும்.

* ஆசிரியர் தனது கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின்போது மாணவர்களை மதிப்பீடு செய்தல் வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டிருக்கும்போது ஆசிரியருக்கு அவர்களின் கற்றல் இயலுமை, இயலாமை மற்றும் தேர்ச்சி என்பவற்றை அறிந்து கொள்வதற்கு ஆற்றல் கிடைக்கப்பெறும். அதற்கேற்ப கற்றல் கற்பித்தற் செயன்முறையின்போது மாணவர்களின் பலவீனங்களை இனங்கண்டு, அதற்கான பின்னூட்டல் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

* ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ள பயிற்சிகளைச் செய்வதற்கு மாணவர்களின் கவனத்தை ஈர்க்கச் செய்யும் வகையில் கற்றல் கற்பித்தற் செயன்முறைகளைத் திட்டமிடுவதில் கவனம் செலுத்தல் வேண்டும்.

* வினாவில் குறிப்பிடப்படுகின்ற வரைவிலக்கணம், விபரித்தல் போன்றவை ஒன்றுக்கொன்று வேறுபட்டது என்பதைச் சுட்டிக்காட்டல் வேண்டும். அதேபோன்று விளக்க, அறிமுகப்படுத்துக, தெளிவுபடுத்துக போன்ற சொற்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்ட கருத்துடையவை என்பதை மாணவர்களுக்கு விளக்கி ஒன்றுக்கொன்று வேறுபட்ட வினாக்களுக்கு விடையளிப்பதற்கு அவர்களைப் பழக்குதல் வேண்டும்.

* ஆசிரியர் தனது அறிவினைப் பயன்படுத்தி சிறிய நிகழ்வுக்கற்கைகளை உருவாக்கி அவற்றில் கோட்பாட்டு ரீதியான அறிவினைப் பயன்படுத்துகின்ற முறையினை மாணவர்களுடன் கலந்துரையாடுவதினூடாக அவ்வாறான வினாக்களுக்கு அவர்களைத் தயார்ப்படுத்தவும் முடியும்.

* வணிகக் கல்விப் பாடத்தின் II ஆம் வினாத்தாளானது பகுதி I பகுதி II என இரு பகுதிகளைக் கொண்டது. இதில் Iஆம் பகுதி தரம் 12 இற்கும் II ஆம் பகுதி தரம் 13 இற்குமுரியது. இப்பாட அலகுகள் தொடர்பில் கற்றல்-கற்பித்தற் செயன்முறையின் போது கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் பகுதி II வினாக்களுக்கு விடையளிப்பதற்கு மாணவர்களை கூடுதலாகப் பழக்கவும், பயிற்சியளிக்கவும் வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது என்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

* புளூமின் வகைப்படுத்தலுக்கேற்ப, அறிவு விளக்கம், பயன்பாடு பகுப்பாய்வு, மதிப்பீடு, புத்தாக்கம் போன்ற கற்றல் மட்டங்களை வினாத்தாள் II இன் அடைவு மட்டத்துடன் ஒப்பிடும்போது அதில் சிறந்த நிலையினைக் காணமுடியாதுள்ளது. இங்கு புத்தாக்கம் போன்ற கற்றல் மட்டங்களை வினாத்தாள் II இன் அடைவு மட்டத்துடன் ஒப்பிடும்போது அதில் சிறந்த நிலையினைக் காணமுடியாதுள்ளது. இங்கு புத்தாக்கம் மதிப்பீடு போன்ற கற்றல் மட்டங்கள் மிகக் குறைந்த வீதத்தினையும் அறிவு, விளக்கம், பயன்பாடு மற்றும் பகுப்பாய்வு என்பவை நடுநிலையான வீதத்தினையும் காட்டுவதுடன், மிகச் சிறந்த அடைவு நிலைமையானது எந்த மட்டத்திலும் காணப்படவில்லை. எனவே அறிவு, விளக்கம், பயன்பாடு, பகுப்பாய்வு, மதிப்பீடு, புத்தாக்கம் போன்ற சகல தேர்ச்சிகளும் மாணவர்களுக்குக் கிடைக்கும் வகையில் கற்றல்- கற்பித்தல் செயன்முறைகள் திட்டமிடப்படல் வேண்டும்.

* க.பொ.த (உயர்தர) வணிகக் கல்வி வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும் முறையினைப் பார்க்கும் போது வணிகக் கல்விப் பாடத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள், தொழில்நுட்பங்கள், நவீன போக்குக்கள் தொடர்பில் மாணவர்களில் காணப்படுகின்ற அறிவானது போதுமானதல்ல என்பது தெரிய வருகின்றது. அத்துடன் விடையினை சரியாகப் பொருத்தி தெளிவாக முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு தேர்ச்சிகள் வழங்கப்படவில்லை என்பது தெரியவருகின்ற இன்னொரு விடயமாகும். எனவே இவ்விடயம் தொடர்பில் வகுப்பறையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் போது கவனம் செலுத்துதல் வேண்டும்.